பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 13 புதன்கிழமை (25.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:091

# போரில் சிக்கியுள்ள மக்களை மீட்க நம்பகமான ஏற்பாட்டைச் செய்க!

## இலங்கையிடம் இந்தியா கோரிக்கை

புதுடில்லி, பெப்ரவரி 25

**வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான பொருத்தமான - நம்பகத்தன்மை மிக்க - நடைமுறை ஒன்றை வகுக்குமாறு இலங்கை அரசைக் கோரியுள்ள இந்தியா, காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவியை வழங்கத் தான் தயார் என்றும் தெரிவித்துள்ளது.**

விடுதலைப் புலிகளிடமிருந்து கிடைத்துள்ள சாதகமான பதில்களைத் தொடர்ந்தே இந்தியா இந்த வேண்டுகோளை விடுப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சரின் பேச்சாளர் விஷ்ணு பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

''மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை அங்கிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் 20பேர் கைது

அம்பாறை, பெப். 25

அம்பாறை நற்பிட்டிமுனைப் பகுதியில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் தமிழர்கள் 20 பேர்கைது செய்யப்பட்டனர்.

தமது அடையாளத்தை உரிய முறையில் உறுதிப்படுத்தத் தவறியவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## மோதலை இடைநிறுத்துமாறு ஐ.நா.செயலாளர் வற்புறுத்து



நியூயோர்க், பெப். 25

இலங்கையில் இராணுவ நடவடிக்கையில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்காக மோதல்களை இடைநிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்கள் செஞ்சிலுவைக் குழுவின் பொறுப்பில் வெளியேற ஒழுங்குகள் செய்ய பிரபாவிடம் வேண்டுகோள்

### ஆயர்கள் நால்வர் கடிதம்

யாழ்ப்பாணம், பெப்.25

வன்னியில் சாவின் அகோரப் பிடியில் சிக்கியுள்ள பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு, அவர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பொறுப்பில் வெளியேற ஒழுங்குகள் செய்யவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் நான்கு தமிழ் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புக்குள் பிரவேசம் - படையினர் தடுத்துக் கடும் சமர் புரிகின்றோம் - புலிகள்

கொழும்பு, பெப். 25

முல்லைத்தீவு மாவட்டத்தை முழுமையாகக் கைப்பற்றுவதற்கான இராணுவ முன்னெடுப்புக்களில் ஈடுபட்டு வரும் படையினர் நேற்று முற்பகல் புதுக்குடியிருப்பு நகருக்குள் பிரவேசித்துள்ளனர் - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதுக்குடியிருப்புப் பகுதியில் கடந்த மூன்று நாள்களாக இராணுவத்தினரின் முன்னேற்றத்தை தடுக்கும் விதத்தில் தமது அணிகள் கடும் எதிர்த் தாக்குதல்களில் ஈடுபட்டு வருவதாக புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தேவபுரம் கிராமப்பகுதியில் இரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற கடும் மோதல்களை(16 ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்க்' கூட்டத்தில் பங்குபற்ற பிரணாப் முகர்ஜி வரமாட்டார்!

கொழும்பு, பெப். 25

கொழும்பில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள 'சார்க்' வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு, மாத்தளன் பகுதிகள் மீது தாக்குதல்; 21 பொதுமக்கள் படுகொலை; 53 பேர் காயம்!

கொழும்பு, பெப். 25

புதுக்குடியிருப்பு, மாத்தளன் ஆகிய பகுதிகள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட பீரங்கி மற்றும் விமானத் தாக்குதல்களில் 21 பேர் கொல்லப்பட்டனர்; 53 பேர் காயமடைந்தனர்.

இத் தகவலை இணையத்தளங்கள் வெளியிட்டுள்ளன.

இணையத்தளங்களில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

மாத்தளன் மருத்துவமனைக்கு அருகில் உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று செவ்வாய்க்கிழமை காலை படையினர் பீரங்கி தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதில் 5 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 21 பேர் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலின் போது மருத்துவமனையின் சுவர் மற்றும் கூரை என்பன சேதமாகின. சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்கள் பெரும் அவலப்பட்டனர்.

கிருசாந்தன் (வயது 17), இயலவன் (வயது 1[illegible]), ப.கமலேஸ்வரி (வயது 40). (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையை ஆரம்பிக்க தென்மாகாண மக்களின் நிதி

### ரூ.4 ½ கோடி ஒதுக்கப்படும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு, பெப்.25

யாழ்ப்பாணத்துக்கான யாழ்தேவி ரயில்சேவையை மீண்டும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக 4 கோடி 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும இத் தகவலை (16 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு வாகனத் தொடரணிகள் ஒரு மாதமாகச் செல்லவில்லை

### வன்னி நிலை குறித்து உலக உணவுத்திட்டம்

கொழும்பு, பெப். 25

வன்னியில் மோதல் காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கான உணவு விநியோகத் தொடரணிகள் கடந்த ஒரு மாத காலமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த மாத இறுதியில் ஏ-9 (கண்டி) வீதி திறக்கப்படும்

கொழும்பு, பெப். 25

ஏ- 9 நெடுஞ்சாலை மார்ச் மாதம் இறுதியில் மக்களின் பாவனைக்காகத் திறக்கப்படும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஆனையிறவு படையினரால் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து யாழ்- கண்டி ஏ- 9 பாதையைத் திறக்கும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது. இருப்பினும், அப்பாதை சேதமுற்றிருந்ததாலும் வீதிகளின் அருகில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தமையினாலும் அதை உடன் திறக்க முடியாமல் போனது.

ஆனையிறவு கைப்பற்றப்பட்டது முதல் இப்போது வரை இராணுவத்தின் பொறியியலாளர்கள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் செய்யுமாறு எந்த நாடும் இலங்கைக்கு அழுத்தம் தரவே கூடாது

### இடித்துரைக்கிறார் பிரதமர் விக்கிரமநாயக்க

கொழும்பு, பெப்.25

புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்கியோ அல்லது சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்தோ அரசு ஒருபோதும் யுத்தநிறுத்தம் ஒன்றுக்குச் செல்லாது என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று உறுதிபடக் கூறினார்.

இலங்கையைத் தொடர்ந்தும் ஒரு காலனித்துவ நாடாக நினைத்துக்கொண்டு இந்நாட்டு உள்விவகாரத்தில் தலையிட்டு, யுத்தநிறுத்தம் ஒன்றுக்கு அழுத்தம் கொடுப்பதை சர்வதேச நாடுகள் நிறுத்தவேண்டும் என்றும் அவர் சொன்னார்.



பிரதமரின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மோதலை நிறுத்துவதற்கான பேச்சுகளில் ஈடுபட அரசிடமும், புலிகளிடமும் அமெரிக்கா கோரிக்கை

## இலங்கையில் எழுந்துள்ள மனிதாபிமான நெருக்கடி குறித்துக் கடும் கவலை தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25

இலங்கையில் காணப்படும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்துக் கடும் கவலை வெளியிட்டுள்ள அமெரிக்கா, இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் மோதலை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான பேச்சுக்களை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைக்குறிப்பிட்டுள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பதில் பேச்சாளர் ரொபேர்ட் வூட் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கேள்வி:- இலங்கை அரசு இன்னும் சில நாள்களில் விடுதலைப் புலிகளை முற்றாக ஒழித்துவிடப் போவதாகத் தெரிவிக்கின்றது. அமெரிக்காவில் உள்ள தமிழர்கள் யுத்தநிறுத்த மொன்றுக்கு அழைப்பு விடுக்குமாறு ஹிலாரி கிளின்டனைக் கோரி வருகின்றனர். நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?

வூட்:- இலங்கை தொடர்பாக எமது முக்கிய கவலை அங்குள்ள மனிதாபிமான நிலை பற்றியதே. நாங்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் குறித்துக் கவலையடைந்துள்ளோம். அவர்களுக்கு என்ன நடைபெறுகின்றது என்பது பற்றியும் கவலை கொண்டுள்ளோம்.

அங்கு தொடரும் மோதல்களில் சிக்கியுள்ள மக்கள் குறித்தும் நாங்கள் கவலையடைந்துள்ளோம்.

இரு அரசுகளும் மோதலை நிறுத்துவது குறித்துப் பேசவேண்டும் என நாம் விரும்புகின்றோம். மன்னிக்க வேண்டும். அரசும் விடுதலைப் புலிகளும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்துப் பேசவேண்டும்.

கே:- ஆகவே, பேச்சு மூலமான தீர்வையே நீங்கள் விரும்புகிறீர்கள். இதற்கு இராணுவ ரீதியாக முடிவு காணப்பட வேண்டும் என நீங்கள் கருதவில்லை என்று அர்த்தமா?

வூட்:- இறுதியாக அந்த நாட்டின் பல்வேறு தரப்புகளும் முன்வைக்கும் சில கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதத்திலான அரசியல் கட்டமைப்பு ஒன்று அவசியம்.

மோதல்கள் முடிவிற்கு வருவதையே நாங்கள் பார்க்க விரும்புகிறோம்.

நாங்கள் பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் - எவ்வளவு தூரம் சிறப்பாகப் பாதுகாக்கப்பட வேண்டுமோ, அவ்வளவு சிறப்பாக - என விரும்புகின்றோம்.

மேலும் நாங்கள் கவலை கொண்டுள்ள மனிதாபிமானக் கரிசனைகளுக்குச் சிறப்பான தீர்வு காணப்பட வேண்டும்.

கே:- மோதல்கள் முடிவிற்கு வரவேண்டும் எனத் தெரிவிக்கிறீர்கள். அப்படியாயின் நீங்கள் யுத்தநிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கவில்லை எனக் கருதலாமா?

வூட்:- நாங்கள் மோதல்களுக்கு முடிவு காணப்படவேண்டும் என்றே தெரிவிக்கிறோம்.

கே:- ஒரு தரப்பு முழுமையான இராணுவ வெற்றியைப் பெற்றால் பேச்சு மூலம் தீர்வு காண்பது எவ்வாறு சாத்தியம்?

**மோதலுக்கு முடிவு காண இரு தரப்புகளுக்கும் இடையேயான விவரங்கள் தொடர்பாகப் பேச வேண்டும்**

வூட்:- நாங்கள் என்ன செய்ய முயலுகிறோம் என்றால், இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் மனிதாபிமான நிலைமை குறித்த எமது கவலைகளுக்குத் தீர்வு காண முயல்கிறோம். இதுவே எமது முக்கிய நோக்கம்.

அதேவேளை, மோதலுக்கு முடிவு காணப்படவேண்டும் என்றும் விரும்புகிறோம். இது சாத்தியமாவதற்கு இரு தரப்பிற்கும் இடையிலான விவகாரங்கள் தொடர்பாகப் பேச்சுகள் இடம்பெற வேண்டும்.

கே:- நீங்கள் தூதுவர் ஊடாகத் தொடர்பு கொள்கிறீர்களா? அல்லது உங்களுக்குத் தெரிந்த வேறு எவராவது உள்ளனரா?

வூட்:- எமது தூதுவர் இதில் தீவிரமாகவுள்ளார். எமது தென் மத்திய பணியகமும் இதில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. சர்வதேச சமூகமும் இதில் ஈடுபட்டுள்ளது.

கே:-இலங்கை அரசு உங்களது கரிசனைகளை செவிமடுக்கின்றதா?

வூட்:-இலங்கை அரசுக்கும், ஏனையவர்களுக்கும் எமது கரிசனைகளைத் தெரியப்படுத்துகின்றோம். அவர்கள் இதனைச் செவிமடுப்பார்கள் என நாம் நம்புகின்றோம்.

நாங்கள் இங்கு அமெரிக்காவைப் பற்றி மாத்திரம் பேசவில்லை. இலங்கையின் நெருக்கடிகள் முடிவிற்குக் கொண்டு வரப்பட வேண்டுமென விரும்பும் சர்வதேச சமூகத்தின் ஏனையவர்கள் குறித்தும் பேசுகிறோம்.

கே:- நீங்கள் சொல்வதற்கு ஒத்துணர்வுள்ளவர்களாக அவர்கள் உள்ளனரா?

வூட்:- இந்த மோதல் முடிவிற்கு வருகின்றதா அல்லது தொடர்கின்றதா என்பதை அடிப்படையாக வைத்தே இதனைத் தீர்மானிக்க வேண்டும். இதனைவிட வேறு மதிப்பீட்டினை இந்தத் தருணத்தில் நாம் தரமுடியாது.

கே:- நீங்கள் இராணுவ வெற்றிக்கான சாத்தியக்கூறுகளை அனுமதித்து. அதன் பின்னர் இங்கிருந்து எவ்வாறு முன்னோக்கி நகர்வது என்பது குறித்து சில பேச்சுகளை மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் கருதுகின்றீர்கள் போலத் தோன்றுகிறதே?

வூட்:- எதற்கான சாத்தியக்கூறுகளுக்கும் நாம் அனுமதியளிக்கவில்லை. எமது கொள்கை என்னவென்றே தெரிவிக்கிறோம்.

கே:- நீங்கள் யுத்தநிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கவில்லையா?

வூட்:- மோதல்கள் முடிவிற்கு வருவதையே நாங்கள் விரும்புகிறோம்.

கே:- விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் பேச்சு மேற்கொள்ள அமெரிக்கா முன்வருமா?

வூட்:- எனக்குத் தெரிந்தவரை இதனை மேற்கொள்ளுமாறு எங்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. மோதலை முடிவிற்கு கொண்டு வருவதற்கான நடைமுறையொன்றுள்ளது. மோதலை முடிவிற்குக் கொண்டுவரும் முயற்சிகளுக்கு எம்மாலான அனைத்தையும் செய்வோம். எனினும் இறுதியில் இரு தரப்புகளும் மோதலை முடிவிற்குக் கொண்டு வருவதற்கும் நிறுத்துவதற்குமான வழிவகைகள் குறித்துப பேசவேண்டும்.

கே:- நீங்கள் என்ன நடைமுறை குறித்துத் தெரிவிக்கிறீர்கள்?

வூட்:- இலங்கை நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக சர்வதேச சமூகம் நடைமுறையொன்றை முன்னெடுத்துள்ளது.

எங்களைப் பொறுத்தவரை மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு எங்களால் இயன்றதைச் செய்வோம். அதேவேளை நாட்டுக்குள் இடம்பெயர்ந்தோர் மற்றும் அவர்களுக்கான மனிதாபிமானப் பணிகளில் நாங்கள் தொடர்புபட்டுச் செயலாற்றுவோம்.

(அ-சி)

## கண்ணீர்க் காணிக்கை



எமது கல்லூரி ஆசிரியை திருமதி கலாநிதி சிவனேசன் அவர்களின் சிரேஷ்ட புதல்வி

### செல்வி சிவநேசன் டிலானி

அவர்கள் அகாலமானதையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஈரவிழிகளுடன்,
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

யா/யாழ்ற்றன் கல்லூரி,
காரைநகர். (83017)

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் குடும்பத்தின் உறவு

### திருமதி செல்வராசா யோகேஸ்வரி

*(யோகம் சித்தி)*

மறைவுற்றமை குறித்து ஆழ்ந்த இரங்கலை செல்வி அண்ணனுக்கும் அவர்தம் உறவுகளுக்கும் தெரிவித்து அவர்களின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*செ.சிவசுப்பிரமணியம் (G.S)*
*குடும்பத்தினர்.*

*கைதடி மேற்கு,*
*கைதடி.* (83014)

## மரண அறிவித்தல்

### திருமதி திருஞானசக்தி கந்தையா



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருஞானசக்தி கந்தையா நேற்று(24.02.2009)செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் கந்தையாவின்(முன்னாள் சாலைப் பரிசோதகர்,இ.போ.ச., கோண்டாவில்) அவர்களின் அன்பு மனைவியும் மோகனதாஸ் (இத்தாலி), மோகனரஞ்சி (ஆசிரியர்,யா/அளவெட்டி அருணோதயாக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமுதினி (இத்தாலி), சண்முகானந்தன்(கிராமசேவை உத்தியோகத்தர், பிரதேசசெயலகம், உடுவில்) ஆகியோரின் அன்பு மாமியும் சந்தோஷன் (யாழ். இந்து கல்லூரி, தரம்10 மாணவன்), செந்தில்தாஸ்(இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.02.2009) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
சி.சண்முகானந்தன்(மருமகன் - கிராமசேவை உத்தியோகத்தர்,பிரதேச செயலகம் - உடுவில்).

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (83015)

## சிறுவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.25

வாழும்கலை அற நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களுக்கான பயிற்சிகள் விரைவில் நல்லூர் கம்பன் கழகத்தில் ஆரம்பமாக உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிகளின் மூலம் மாணவர்களின் ஆளுமைத்திறன், ஞாபகசக்தி என்பவற்றை வளர்க்க முடியும் என நிர்வாகிகள் கூறினர். (1-6)

## ஐந்து ஆசிரியர்களுக்கு இன்று கௌரவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் கணிதபாட ஆசிரியர்களாகப் பணியாற்றி ஓய்வுபெறும் ஐவர் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வலய ம்காமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் கௌரவிக்கப்படவிருக்கின்றனர்.

கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.திருச்செல்வம், நல்லூர் எச்.ரி.எம். பாடசாலையைச் சேர்ந்த வி.திருச்செல்வம், கோப்பாய் ம.வியைச் சேர்ந்த எம்.சுப்பிரமணியம், கொக்குவில் ஞானபண்டிதாவைச் சேர்ந்த கே.மகாலிங்கம், அச்செழு சைவப்பிரகாசத்தைச் சேர்ந்த கே.மனோராஜன் ஆகியோரே கௌரவிக்கப்படவுள்ளனர். (1)

## யாழ்.சட்டத்தரணிகள் சங்க நடப்பாண்டு நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த வார இறுதியில் யாழ்.மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அப்போது நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகக்குழு தெரிவுசெய்யப்பட்டது.

செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தலைவராகவும் பி.ஜே.அன்ரனி உபதலைவராகவும் கனகரத்தினம் கேசவன் செயலாளராகவும் பாலசுப்பிரமணியம் தவபாலன் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகக் குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தில் தலைவரும் செயலாளரும் தொடர்ச்சியாக பதினொருவருடங்கள் அப்பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (04)

## மரண அறிவித்தல்கள்



### சிவநேசன் டிலானி

**(மாணவி,பொஸ்கோ பாலர் பாடசாலை)**

காரைநகர், வேதரடைப்பைச் சேர்ந்த சிவநேசன் டிலானி நேற்று(24.02.2009) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிவநேசன்(ஆசிரியர், யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) - கலாநிதி (ஆசிரியை, யாழ்ரன் கல்லூரி, காரைநகர்) தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் ஆச்சிமுத்து, பொன்னம்பலம் பரமேஸ்வரி ஆகியோரின் பேர்த்தியும் சங்கவியின் சகோதரியும் சுந்தரலிங்கம், பேரானந்த சிவம்(சிமெந்துக்கூட்டுத்தாபனம்), உருத்திரேஸ்வரன்(ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), பரம்சோதி(லண்டன்), மாதுமை (விவசாயத் திணைக்களம்) ஆகியோரின் பெறாமகளும் காந்தரூபன்(லண்டன்), வடிவாம்பிகை ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் வேதரடைப்பில் உள்ள அவரது இல்லத்தில் இன்று(25.02.2009) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.சிவநேசன்(தந்தை).

வேதரடைப்பு,
காரைநகர். (83016)

### திருமதி செல்வராசா யோகேஸ்வரி

**(கமநலசேவை நிலைய உத்தியோகத்தர், கைதடி)**



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வராசா யோகேஸ்வரி நேற்றுமுன்தினம் (23.02.2009) திங்கட்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் செல்வராசாவின் (செல்வி - ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஆறுமுகவடிவேல், ஆறுமுகநாதன், ஆறுமுகசுவாமி, சரஸ்வதிதேவி, தவமணிதேவி, ஆறுமுகசோதி, சாந்தினி, ஆறுமுகலிங்கம், ஆறு முகசீலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சரோஜினிதேவி, கோடீஸ்வரன், யோகேஸ்வரன், மகேஸ்வரி, கமலாஜினிதேவி, ஆ.யோகேஸ்வரி,புவனேஸ்வரி, யோகேஸ்வரி, காலஞ் சென்ற நடராசா மற்றும் வாமதேவன், பராசக்தி, பாலராஜேஸ்வரன், சாந்தினி, லவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை(26.02.2009)வியாழக்கிழமை இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.செல்வராசா (கணவன்)
(ஓய்வுபெற்ற கிராமஅலுவலர்).

கைதடி தெற்கு,
கைதடி. (83013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கை - இந்திய உறவு நிலை எதை எட்டும் வரைக்கும் தொடரும்?

இலங்கை - இந்திய உறவு தொடர்பான விடயங்களை விமர்சித்து நேற்று வெளியான இரண்டு செய்திகள் இங்கு கவனத்துக்குரிய அம்சங்களாகின்றன.

ஒன்று - இலங்கை அரசுக்கு இந்தியா வழங்கும் இராணுவ - பொருளாதார உதவிகளை நிறுத்திக்கொள்ளவேண்டும் எனத் தெரிவித்து இந்தியரான அருட்திரு ஜெகத் கஸ்பார் அடிகளார் தமிழகத்தில் முன்வைத்த கருத்து.

மற்றையது - இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததும் இலங்கை, இந்தியாவுடனான உறவைக் கைவிட்டு சீனாவுடனான உறவை வலுப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தென்னிலங்கையில் நடத்திவரும் பிரசாரம் பற்றிய தகவல்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்றவை இலங்கை நாடாளுமன்றில் அதிக உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்ற அமைப்புகளல்ல என்பது உண்மைதான்.

ஆனால், இன்று இலங்கையின் அரசியல் போக்கே பௌத்த - சிங்களப் பேரினவாதச் சிந்தனைத் தளத்துக்கு அடிபணிவதை ஒட்டியதாகவே அமைந்திருக்கின்றது என்பது கவனிக்கத்தக்கதாகும். பேரினவாதத்தில் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கைச் சிங்களத்தைத் திருப்திப்படுத்தும் வகையில் அதிகாரத்தைச் செலுத்துவோரே தென்னிலங்கையில் ஆட்சியில் நின்று, நீடிக்கலாம் என்ற நிலைமை.

இத்தகைய பேரினவாதச் சிந்தனைப் போக்கைத் தூண்டி, ஊக்குவித்துக் கொழுந்து விட்டெரியச் செய்யும் சக்திகளுக்கு இதனால் தெற்கில் மவுசும் செல்வாக்கும் அதிகம். இத்தகைய சக்திகளைப் பகைத்துக் கொள்ளாமல் அரவணைத்துச் செல்வதே ஆட்சிப்பீடத்துக்கு இதமானதாக இருக்கும் என்ற சூழல்.

இக்காரணத்தினால்தான் ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி., தேசியப் பற்றுள்ள தேசிய இயக்கம் போன்றவை எல்லாம் ஜனாதிபதியின் அலரிமாளிகை இல்லத்துக்குள் அதீத செல்வாக்குச் செலுத்தும் போக்கு இங்கு காணப்படுகின்றது. இச்சக்திகளின் கூற்றுக்கு ஆட்சி அதிகாரம் அடிபணிகின்றது. இத்தரப்புகள் எதிர்பார்க்கின்ற மாதிரி - அல்லது அவற்றைத் திருப்திப்படுத்துகின்றமைபோல - தமிழர் தரப்பின் கிளர்ச்சிக்கு எதிரான போர் முழுத் தீவிரத்துடனும் வெறியுடனும் முன்னெடுக்கப்படுகின்றமையும் இங்கு வெளிப்படையானது.

இத்தகைய தென்னிலங்கைப் பேரினவாத சக்திகள் எல்லாம் இந்தியாவை விட, இந்தியாவுக்கு இப்பிராந்தியத்தில் சவாலான தரப்பாக இருக்கக் கூடிய சீனாவுடன்தான் கைகோர்ப்பதை விரும்புகின்றன.

''தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போருக்கு மாத்திரம் இந்தியாவைப் பயன்படுத்த வேண்டும். பௌத்த நாடான சீனாதான் பௌத்தர்களான இலங்கை மக்களின் கலாசார, பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்புடையது. இந்தியா சிங்கள மக்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையை உண்டு பண்ணக்கூடியது.'' - என்ற கருத்து இந்தத் தரப்புகளால் முன்வைக்கப்பட்டும் வருகின்றது.

பொதுவாகவே இத்தகைய தென்னிலங்கைத் தீவிரவாத சக்திகளின் போக்குக்கு எடுபடும் கொழும்பு ஆட்சியாளர்கள், இப்போது புலிகளுடனான போரை முன்னெடுப்பதற்கான உதவிகளை சீனா, இந்தியா ஆகிய இருதரப்புகளிடமிருந்தும் பெற்றுக்கொள்வதற்காக இரண்டுக்கும் நடுவே மதில்மேல் பூனையாக இருந்தாலும், தங்கள் விடயம் - தேவை - பூர்த்தியானதும் எந்தப் பக்கம் சாய்வார்கள் என்பதை இப்போதே ஊகித்துக் கொள்ளமுடியும். அது இலகுவானது.

அதைத்தான் வேறு வார்த்தைகளில் கூறியிருக்கின்றார் அருட்திரு ஜெகத் கஸ்பார் அடிகளார்.

'' இலங்கை, இந்தியாவுக்கு நட்பு நாடு இல்லை. வரலாற்று ரீதியாக அது இந்தியாவின் நட்பு நாடாக இருந்ததுமில்லை.'' - இப்படி சென்னையில் வைத்துக் கூறியிருக்கின்றார் கஸ்பார் அடிகளார்.

அனைத்து சமூகத்தவர்களும் இணைந்து இலங்கைப் பிரச்சினையை ஒட்டிப் போராடுவதற்காக உருவாக்கியுள்ள 'இன அழித்தலுக்கு எதிரான இந்தியர்கள் அமைப்பின்' பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியிருக்கின்றார்.

இந்தியா - பாகிஸ்தான் போரின்போது, பாகிஸ்தான் பக்கம்தான் இலங்கை நின்றது. இந்தியா வல்லரசாக வளர்வதை விரும்பாத தரப்புகளுடன் இலங்கை கை கோர்க்கின்றது - என்றெல்லாம் கஸ்பார் அடிகளார் அங்கு சுட்டிக்காட்டினார்.

இந்திய - சீன எல்லையில் போர் வெடித்தபோது இந்தியத் தரப்புக்கு உதவுவதற்காக இலங்கையின் தமிழர் தாயகப் பகுதியில் ஈழத் தமிழர்கள் தங்களின் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் நிதி திரட்டி அனுப்பினார்கள்.

அப்போதும் சரி, எப்போதும் சரி, இந்தியாவுக்கு நெருங்கிய நட்பு சக்தியாக இருந்து வருபவர்கள் ஈழத் தமிழர்களே.

இலங்கை ஆட்சிப் பீடத்தில் ஈழத் தமிழர்களுக்கு அதிகாரமும், பங்களிப்பும் இல்லாத காரணத்தால், அந்த ஆட்சித் தரப்பை இந்திய சார்புப் போக்குக்கு வழிநடத்தக்கூடிய செல்வாக்கு இல்லாதவர்களாக - அதிகாரம் அற்றவர்களாக - ஈழத் தமிழர்கள் இருக்கலாம். அதனால் அவர்களின் இந்திய சார்பு நட்பு நிலைப்பாடு இந்தியாவுக்கு வெளிப்படையாகப் பயன் தருவதாக இல்லாது இருக்கலாம். ஆனால் அந்த நட்பு வாஞ்சை, ஆத்மார்த்தமானது. அதனை இந்தியா புரிந்து கொள்வது - உணர்ந்து கொள்வது - முக்கியம்.

இதைத்தான் ஈழத் தமிழர்கள் திரும்பத் திரும்ப புதுடில்லியிடம் உரைத்து வருகின்றார்கள். உண்மையான நட்பு சக்தி எது,போலி வேடதாரி நண்பர்கள் யார் என்பதை புதுடில்லி அடையாளம் காண்பது அவசியம் என்று அவர்கள் குறிப்பிடுவது இதனைத்தான்.

# பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக நேற்று சமுர்த்திப் பயனாளிகள் அமைதிப் போராட்டம்

## பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.25

பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை காலை சமுர்த்தி நிவாரணம் பெறும் மக்கள் ஒன்று கூடி அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சமுர்த்தி மகாசங்க நிறைவேற்றுக் குழுத்தலைவி திருமதி எஸ்.கலாநிதி தலைமையில் சமுர்த்தி நிவாரணம் பெறுவோரின் அவலங்கள், கோரிக்கைகள், பிரச்சினைகள் தொடர்பாக உயர்பீடங்களுக்கு மகஜர்கள் கையளிக்கப்பட்டன. எனினும் அவற்றுக்கு எந்தவித தீர்வும் கிடைக்கப்பெறாத நிலையில் நேற்று சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் இந்த அமைதிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பருத்தித்துறைப் செயலகத்துக்கு முன்னால் நேற்றுக் காலை பெரும் எண்ணிக்கையான சமுர்த்தி நிவாரணம் பெறும் மக்கள் ஒன்றுகூடி செயலக உத்தியோகத்தர்களை உள்ளே செல்லவிடாது தடுத்து நிறுத்தி கோரிக்கைகளை முன்வைத்து அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளையும் தாங்கியிருந்தனர். பொலிஸாரும் இராணுவத்தினரும் அங்கு கடமையில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டி ருந்த சமுர்த்தி மகாசங்க நிறைவேற்றுக் குழுவைச் சேர்ந்த 6 உறுப்பினர்களை பிரதேச செயலக மண்டபத் துக்கு அழைத்து பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் அவர்களுடன் பேச்சு நடத்தினார்.

இதனையடுத்து மேற்படி சங்கத் தலைவி ஐந்து கோரிக் கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைப் செயலரிடம் கையளித்தார்.

கையளிக்கப்பட்ட மகஜரைப் பார்வையிட்ட பிரதேச செயலர் யாழ். அரச அதிபரைச் சந்திக்க அனுமதி பெற்றுத்தர வேண்டும் என்ற முதலாவது கோரிக்கையை ஏற்று உடனடியாக தொலைபேசியினூடாக அரச அதிபருடன் தொடர்புகொண்டார். அங்குள்ள நிலைமை பற்றி அரச அதிபருக்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

அதனை யடுத்து அரச அதிபர் சமுர்த்தி மகா சங்க குழுவினரை இன்று புதன் கிழமை காலை யாழ். செயலகத்தில் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஏனைய நான்கு கோரிக்கைகளுக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேச செயலர் உறுதியளித்ததையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டோர் பிரதேச செயலகப் பகுதியை விட்டு அமைதியாக வெளியேறினர்.

(50-218-70-236)

# காரைநகரில் நடந்த பஸ்விபத்தில் நான்கு வயதுச் சிறுமி மரணம்!

## தந்தை காயங்களுடன் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,பெப்.25

காரைநகர் சிவன்கோவில் வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8.15 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் 4 வயதுச் சிறுமி ஒருவர் பலியாகியுள்ளார். அச் சிறுமியின் தந்தையும் படுகாயத்துடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் தந்தையும் மகளும் வந்து கொண்டிருந்தனர். அப்போது அந்த பாதையில் வந்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதாலேயே இந்த மரணம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வேதரடைப்பு, காரைநகரைச் சேர்ந்த சிவநேசன் டிலானி (வயது4) என்னும் சிறுமியே பலியாகியுள்ளார். தந் தையான எஸ்.சிவநேசன் (வயது37) காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சம்பவ இடத்தில் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிவான் திருமதி ஜோய் மகிழ்மகாதேவன் விசாரணைகளை மேற்கொண்டார்.

பஸ்ஸின் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (50-202-250)

# குறுகிய பகுதிகளில் பெருமளவானோர் தங்குவதால் நோய் தோற்றும் அபாயம்! சுகாதார வசதிகளும் குறைவு!!

## மணிக்பாம் அகதி முகாம் மக்கள் பெரும் அவலத்தில்

வவுனியா, பெப்.25

* உரிய வசதிகளின்றி பெரும் கஷ்டத்தின் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றோம். சமைத்து உண்பதற்கு மா, அரிசி என்பன வழங்கப்படுகின்ற போதும் ஏனைய பொருள்களை வாங்குவதற்கு எம்மிடம் பணம் இல்லை. குறுகிய பகுதியில் பெருமளவானோர் தங்க வைக்கப்பட்டுள்ளதால் நோய்களும் ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

* முகாமில் சுகாதார வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றது. குளிப்பதற்கு பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது. எனவே உரிய வசதிகள் செய்து தரப்படவேண்டும்.

கொழும்பிலிருந்து வந்த செய்தியாளர் குழுவிடம் நலன்புரிநிலையத்தில் தங்கியுள்ள மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்த செய்தியாளர் குழுவொன்றினை தேசிய பாதுகாபிற்கான மத்திய நிலையம் வவுனியா மணிக்பாம், கதிர்காமர் நிவாரணக் கிராமத்திற்கு நேற்று முன்தினம் அழைத்துச் சென்றிருந்தது. இந்தச் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரி விக்கையிலேயே அங்கு தங்கவைக் கப்பட்டுள்ள மக்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

மணிக்பாம், கதிர்காமர் நிவாரணக் கிராமத்தில் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

இங்கு செய்தியாளர்களிடம் மக்கள் மேலும் தெரிவித்ததாவது:

பொது மக்கள் நாம் தொழில் செய்ய முடியாமல் உள்ளது. இடம் பெயர்ந்து வந்த எமக்கு உரிய வசதிகள் செய்து தரப்படவேண்டும். எமது பிள்ளைகள் கல்வி கற்பதற்கு அப்பியாகச் கொப்பிகளுக்கு தட்டுப்பாடு நிலவு கின்றது. ஒரு கொப்பியிலேயே 8 பாடங்களையும் எழுதவேண்டிய நிலை காணப்படுகின்றது. நாம் எங்கும் வெளியேறமுடியாத நிலை உள்ளது- என்று தெரித்தனர்.

இதேவேளை, பொதுமக்களின் கருத்துக்கள் குறித்து வவுனியா செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸிடம் வினவப்பட்ட போது, இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆரம்பக் கட்டமாக தற்போது இத்தகைய வசதிகளை வழங்கியுள்ளோம். தற்போதைய நிலையில் அதிக பட்சமாக கூடியவற்றை நாம் வழங்கி வருகின்றோம் என்று தெரிவித்தார்.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்துவரும் மேலும் 40 ஆயிரம் பொதுமக்களை தங்கவைப்பதற்கான 1000 ஏக்கர் நிலத்தினை நாம் ஏற்பாடுசெய்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். 2,3 கிழமைகளுக்குள் இந்தப் பணிகள் நிறைவடையும் என எதிர்பார்க்கின்றோம் என்றும் அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸ் கூறியுள்ளார்.

வவுனியாவில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள 13 நலன்புரி நிலையங்களிலும் போதியளவு சுகாதார வசதிகள் இல்லையெனவும் இங்கு தொற்றுநோய்கள் பரவுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது என்றும் மணிப்பாம் முகாமில் கடமையில் இருந்த வைத்திய உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

முகாம்களுக்கு செல்வோர் தொண்டைகரகரப்புடன் கூடிய காய்ச்சலுக்கு உள்ளாவதாகவும் உரிய சிகிச்சைகள் இல்லாதநிலை காணப்படுகின்றது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

## நாளை


| | |
|---|---|
| மாசி 14 | 26.02.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | பிரதமை |
| | காலை 08.04 வரை |
| நட்சத்திரம்: | புரட்டாதி |
| | மு.இ. 10.14 வரை |
| சுபநேரம்: | 07.59- 09.29 |
| ராகுகாலம்: | 01.59 - 03.29 |

# தவக்காலச் சிந்தனை



## உண்ணா நோன்பு: காலாவதியான ஓர் ஒறுத்தல் முயற்சியல்ல!

### தவக்காலச் செய்தியில் திருத்தந்தை



இறைவனுடைய திருவுளப்படி நாம் வாழ்வதற்கு நமக்குத் தடையாய் இருக்கின்ற பாவ வாழ்வில் இருந்து நம்மைக் காத்துக்கொள்ள நாம் உண்ணாநோன்பிருப்பது உன்னதமான ஒரு மருந்தாகும். இவ்வாறு திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் தனது இவ்வருடத்துக்கான தவக்காலச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பத்துக் கட்டளைகளைப் பெறுவதற்கு முன்னதாக மோசேயும், ஒரேபு மலைக்குப் போவதற்கு முன்னதாக இறைவாக்கினர் எலியாவும்,பாலைவனத்தில் சோதிக்கப் படுவதற்கு முன்ன தாக எம் ஆண்டவர் இயேசுவும் உண்ணா நோன்பிருந்ததைச் சுட்டிக் காட்டி, உண்ணா நோன்பு ஆற்றக்கூடிய மகத்தான விடயங்களைத் திருத் தந்தை நினைவூட்டினார்.

ஆனால் இன்று பலர் உலக இலாபங்களுக்காகவே உண்ணா நோன்பிருக்கின்றார்கள் என்று கூறிய திருத்தந்தை, தமது உடல் ஆரோக்கியத்துக்காக உண்ணா நோன்பிருக்கும் பலரை உதாரணம் காட்டி ஆன்மீக நலனுக்காக உண்ணாநோன்பிருக்கும் பாரம்பரியமான பழக்கத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

உண்ணாநோன்பு காலாவதியாகிவிட்ட ஒரு பழக்கமல்ல என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், அது எமது தனிப்பட்ட வாழ்வில் இறைவனோடு ஒப்புரவாக எமக்குத் துணை செய்யும் அதே வேளையில், எம் அயலவரோடும் ஒருமைப்பாட்டோடும் வாழ துணை செய்யும் என்றும் திருத்தந்தை எடுத்துரைத்து, எதிர்வரும் தவக்காலத்தில் நாம் எல்லோரும் இந்த ஒறுத்தல் முயற் சியைச் செய்து எமது ஆன்மீக வாழ்வில் வளர்ச்சிகாண வேண்டும் என்று இறைமக்களாகிய எமக்கு அழைப்பு விடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.றோட்டரிக் கழகம்

யாழ். M.R.T.C யின் ஆலோசகரும், சர்வதேச ஊடகத்துறை வல்லுனரும், பட்டதாரியுமான திரு HENRIK GRUNNET அவர்களால் Media in Conflict Areas" எனும் பொருள் பற்றி விரிவுரை நடத்தப்படும்.

இடம் : உதயன் கேட்போர் கூடம்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: நாளை (26.02.2009) வியாழக்கிழமை பி.ப. 4.30 முதல் 5.30 மணிவரை

சகல றோட்டறி மற்றும் றோட்டரக்ட் கழக உறுப்பினர்களும் மற்றும் இவ் விடயத்தில் ஆர்வமுள்ளவர்களும் கலந்து கொள்ளலாம்.

யாழ்.றோட்டரிக் கழகம். தலைவர்.

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்
வேலுப்பிள்ளை சிவனேசன்
அவர்களின் அன்பு மகள்

### டிலானி சிவனேசன்

அவர்களின் திடீர் மரணச் செய்தியை அறிந்து மிகுந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(83011)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில்
பிரதம எழுதுநராகக் கடமையாற்றும்
அல்பிரட் மரிய குணரட்ணம் அவர்களின் அன்புத் தந்தை

### அகஸ்தீன் அல்பிரட்

அவர்கள் 22.02.2009 சனிக்கிழமை காலமாகி விட்டார்.
அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலர்கள்,
மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்,
யாழ்.மாவட்டம். (83009)

## மரண அறிவித்தல்

### தம்பு பொன்னுத்துரை (சின்னக்கிளி)

(களஞ்சியப் பொறுப்பாளர், இ.போ.ச., கோண்டாவில் டிப்போ)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் ஹட்சன் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு பொன்னுத்துரை 21.02.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பு - மரகதம் தம்பதியினரின் அன்பு மகனும் இலட்சுமிதேவியின் பாசமிகு கணவரும் சுமதி (கனடா), சுகந்தி (நோர்வே), சுடர் (ஆசிரியை), சுகந்தன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.02.2009 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54, புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை.
தகவல்:
தம்பு பரமசாமி (சகோதரன்).

## கண்ணீர் அஞ்சலி



எமது கழகத்தோழர்கள் தாசன், குருவின் அன்புத் தாய்

### வேலாயுதம் பஞ்சபாக்கியம்

தாய்க்குலத்தில் பிறந்து
நோய் பிணி நீக்கி
ஊர்ப்பணி செய்து
உறங்கினாயோ?

தாதியாய் தரணி போற்ற
தரித்த நோக்கெல்லாம்
அசுரனாய் வந்து
ஔடதம் தந்தாயே.

பிரிந்த உன் செய்தி கேட்டு
பெரும் துயர் கொண்ட பலர்
இறந்த உன் செய்தி கேட்டு
இன்னமும் துயரில் பலர்

பிரிந்து சென்ற உமக்கு எம்
புரியாத கண்ணீர் அஞ்சலிகள்.

கழுகுகள் விளையாட்டுக் கழகம்,
நெற்கொழு, வல்வெட்டித்துறை. (சி/557263)

## கொடிகாமத்துக்கு மேலும் 79 பேர் வந்தனர்

யாழ்ப்பாணம், பெப்.25

வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மேலும் 24 குடும்பங்களைச் சேர்ந்த 79 பேர் கொடிகாமத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 7 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேரும் மறுநாள் திங்கட்கிழமை 17 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேரும் அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் கொடிகாமம் அ.த.க. வித்தியாலய நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், பெப்.25

திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பைச் சித்தரிக்கும் மாபெரும் தயாரிப்பாகிய திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளான இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மறைமாவட்ட முன்னாள் குருமுதல்வரும் அஞ்சனந்தாழ்வு பங்குத்தந்தையுமான அருள் திரு. ஜே.நீக்கிலஸ் அடிகளார் இவ் ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்களுக்கான பிரதிகளை வழங்குவார்.

இவ்வாண்டு 'கல்வாரி யாகம்' என்னும் பெயரில் திருப்பாடுகளின் நாடகம் அடுத்த மாதம் 30,31 ஏப்ரல் 01,02,04,05 ஆகிய நாள்களில் மேடையேற்றப்படவுள்ளது. (1)

## Broiler For Sale

Home Delivery Available
*Contact 077 3086721*

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Sony 21" T.V கள் Model No G 21 Qw3, G 21 Q, ரேடியோ கசெற் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: இ.மகேஸ்வரன்
சீனிப்புளியடி, இணுவில் இந்து ஆரம்பப் பாடசாலை அருகில்
7ஆம் K.M கட்டையடி, K.K.S. வீதி, இணுவில்.

## சாவகச்சேரியில் சுகாதாரப் பகுதியினர் திடீர்சோதனை

சாவகச்சேரி நகரப் பகுதி வணிக நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் நேற்று செவ்வாய்க்கிழமை திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

வணிக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த திகதி காலாவதியான பிஸ்கட் வகைகள், மென்பானங்கள், பால்ரின்கள் பழச்சாறுகள் (ஜாம்) உட்பட பல பொருள்களைக் கைப்பற்றினர்.

அந்தப் பொருள்கள் வர்த்தகர்களின் இணக்கத்துடன் அழிக்கப்பட்டன. (1-207)

## மெய்வன்மைப்போட்டி

இருபாலை சீ.சீ.த.க. கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி க.சுந்தரலிங்கம் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக [illegible] திரு V. தியாகராஜா கலந்துகொள்வார். (1)

## நன்றி நவிலல்



அமரர்

### கந்தையா கண்மணி

கடந்த 05.02.2009 அன்று இறைவனடி சேர்ந்த வராம்பற்றை கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், ஆலடி ஒழுங்கை, நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் தற்பொழுது பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கில் வசித்தவருமாகிய எமது குடும்பத் தலைவி அமரர் கந்தையா கண்மணி அவர்கள் நோயுற்ற வேளையில் அவருக்கு பரிவுடன் சிகிச்சை அளித்த யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் அவரது மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தி யோருக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டோருக்கும், தந்தி, கடிதம், தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்த உள் நாட்டு, வெளிநாட்டு அன்பர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் வேறுபல வழிகளில் உதவி புரிந்த அன்புள்ளம் கொண்ட அயலவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு. (83000)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மரியமலர் பத்திநாதர் (தவமணி)



பலாலியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியமலர் பத்திநாதர் (தவமணி) அவர்கள் நேற்று (24.02.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தேவசகாயம் (இளைய குட்டி) மற்றும் திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மனுவல் திரேசம்மா (சின்னம்மா) தம்பதியரின் அன்பு மருமகளும் பத்திநாதரின் அன்பு மனைவியும் ராஜினி, சறோஜினி, றஞ்சினி (இத்தாலி), விநோத், சுதர்சினி, விநோதினி, நிஷாலினி, டயானா ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமார் (சவூதி), அன்றூ (இத்தாலி), றாதன், நிஷாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும் கரிஷின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.26, சென்பற்றிக்ஸ் றோட்,
குருநகர், யாழ்ப்பாணம். (சி/557264)
தகவல்:
விநோத் (மகன்).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திக் கிரியை அழைப்பும்

மண்ணில் 21 07 1941



விண்ணில் 26 01 2009

கடந்த 26.01.2009 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த
எங்கள் அன்புக்கும், ஆதரவிற்குமுரிய

### திருமதி பரமேஸ்வரி சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்)
திதி: அமாவாசை

" உயிருள்ளவரை எம்மை அன்பு செய்தாய்
எம்முயிருள்ளவரை உமை மறவோம்"

அன்பின் அவதாரமே!
ஆதரவின் உறைவிடமே!
குருவாகிய குலவிளக்கே!
உபதேசம் உம் உரிமை!

எல்லோருக்கும் எல்லாமாய் இருந்து வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிப்பயணம் விடையளிக்க முடியாத ஈரவிழிகளுடன் நாங்கள்......

பாலாவி தெற்கு,
கொடிகாமம்.
செ.சுந்தரலிங்கம் (கணவர்), சகோதரர்கள்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
(83008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த போக உற்பத்திக்கென விதை மரக்கறிச் செய்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.25

குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் அடுத்த போகத்திற்கென ஒன்றரை ஹக்டேயர் நிலப்பரப்பில் விதை மரக்கறிச் செய்கையை மேற்கொண்டுள்ளது.

திருநெல்வேலியில் மேற்படி சங்கத்தின் விவசாய நிலப்பரப்பில் இந்த மரக்கறி இனங்கள் செய்கை பண்ணப்பட்டுள்ளன.

இந்த மரக்கறி இன பயிர்கள் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

இந்தமரக்கறிப் பயிர்களின் விதைகள் அடுத்த போகத்திற்கான பயிர் செய்கைக்குப் பயன்படுத்தப்படும்.

இவ்வாறு உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி விதைகளுக்குக் குடாநாட்டு விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. (203-224)

## ஊடகவியல் கற்கை பாட அறிமுக விழா காரை நகரில்

யாழ்ப்பாணம்,பெப்.25

கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில்,தொடர்பாடல் ஊடகவியல் கற்கைபாட அறிமுகவிழா இன்று புதன்கிழமை கல்லூரி அதிபர் ஆ. குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இவ் விழாவில் போஜோ-டென்மார்க் ஊடக ஆலோசகர் கலாநிதி ஹென்றிக் குறுநெற் பிரதம விருந்தினராகவும், ஊடகவளங்கள் மற்றும் பயிற்சிமையப் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

ஊடகக்கல்வியைப் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தும் நோக்குடன் வைபவரீதியாக இப்பாடநெறி ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது. (அ)

## பால் லீற்றர் 50 ரூபா

கோப்பாய் கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பால் விற்பனை நிலையத்தில் பாலின் விலை லீற்றர் 50 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத் தலைவர் கே.சிவ பாலன் இத்தகவலைத் தெரிவித்தார். நுகர்வோர் தமக்குத் தேவையான அளவு பசுப்பாலை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் கூறினார். (203-224)




# குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் கிணறு இறைக்கும் பணிகள் துரிதம்

யாழ்ப்பாணம்,பெப்.25

குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் கிணறு இறைக்கும் பணிகள் பரவலாகத் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாநகரசபையின் ஏற்பாட்டில் மாநகர எல்லைக்குட்பட்ட கிணறுகள் இறைக்கப்பட்டு வருகின்றன. இப் பணிக்கென 10 வரையான நீரிறைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மானிப்பாய் பிரதேச சபையும் தனது எல்லைக்குட்பட்ட கிணறுகளை இறைத்துச் சுத்தம் செய்யும் பணியை மேற்கொண்டு வருகின்றது. கிணறுகளை இறைத்துக்கொள்ள விரும்புவோர் சபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கிணறுகளை இறைப்பதில் மக்கள் பெரும் ஆர்வம் கொண்டுள்ளனர்.

நகரசபையில் உள்ள இரண்டு நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் தினமும் நீரிறைக்கும் பணிகள் நடைபெறுவதால் அவற்றினைப் பெற்றுக் கிணறுகள் இறைப்பதற்குப் பதிவுகள் மேற் கொள்கின்றனர். (202-130-207-224)

## விதை உற்பத்திச்சங்கத்திற்கு யு.என்.டி.பியால் உபகரணம்

யாழ்ப்பானம், பெப்.25

குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையான உபகரணங்களை ஐ.நா.அபிவிருத்தி நிறுவனம் வழங்கவுள்ளது.

மேற்படி சங்க விதை உற்பத் திக்கென விதை சுத்திகரிப்பு மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கான உபகரணங்களைத் தந்துதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. குடாநாட்டில் மேற்படி சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் இந்த மரக்கறி விதைகளைப் பாதுகாத்து வைப்பதற்கான நவீன உபகரண வசதிகள் எதுவும் இங்கு இல்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டது (203-224)

# யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் இல்லை

## தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் கவலை

மானிப்பாய்,பெப்.25

யாழ்.மாவட்டம் கடந்த 30 வருடமாக அபிவிருத்தியின்றிப் பின்னடைந்து வருகின்றது.

கடந்த 5 வருடமாக அபிவிருத்திக்கான முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டபோதும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ. மா.க.முதலியார் கவலை தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் 9 ஆயிரத்து 500 விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் ஒய்வூதியத்துடன் நிரந்தரமாகப் பணியாற்றுகின்றனர்.

ஆனால் வடக்கு-கிழக்கில் இந்த நியமனம் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் 450 கிராம அலுவலர் பிரிவுகளில் 440 விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் பணியாற்றினர்.

ஆனால் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இந்தப் பதவிக்கு நியமனம் செய்யப்படாமையால் எமது பிரதேசம் வளர்ச்சி, அபிவிருத்தியின்றி உள்ளது.

கடந்த 16.03.2006 மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசாங்க அதிபரின் ஒப்புதலோடு மேற்படி நியமனத்தை செய்யுமாறு சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் விவசாய அமைச்சருக்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆனால் மூன்று வருடங்கள் நிறைவுற்ற நிலையில் இந்நியமனம் தொடர்பாகச் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

யாழ்.மாவட்டம் தற்போது சண்டிலிப்பாய், கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் புதிய கமநல சேவை நிலையங்களை உருவாக்கியுள்ளது.

ஆனால் பெரும்பாக அலுவலர், காரியாலய காரிய சகாயர், முகாமைத்துவ உதவியாளர்,விவசாய விரிவாக்கல் அலுவலர்கள் 450 என பெருமளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் ஆளணிபற்றாக்குறையுடன் யாழ்.மாவட்ட விவசாய கமநல கேந்திர நிலையங்கள் இயங்கி வருகின்றன.

சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்-என்று அவர் தெரிவித்துள்ளார். (203-95-130)

## யாழ்.ப.நோ. கூ.சங்கத்திற்கு விமானம் மூலம் குளிர்பானம்

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு விமானம் மூலம் குளிர்பானங்கள் எடுத்துவரப்பட்டுள்ளதாகச் சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

விமான மூலம் எடுத்து வரப்பட்ட எலிபன்ட் ஐஸ்கிறீம் வகைகள் மற்றும் பைக் கெற் பால் போன்றவை சங்கத்தின் கூட்டுறவு நகர் விற்பனை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஐஸ்கிறீமை நியாய விலையில் நுகர்வோர் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (203-224)

## சிறுகதைப் போட்டிக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,பெப்.25

செம்பியன் செல்வன் ஞாபகார்த்தமாக ஞானம் சஞ்சிகையால் நடத்தபடும் சிறுகதைப் போட்டிக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

அமரர் செம்பியன் செல்வன் குடும்பத்தினரின் அனுசணையுடன் நடத்தப்படும் இச்சிறுகதைப் போட்டியில் முதல் மூன்று பரிசுகளைப் பெறும் சிறுகதைகளுக்கு முறையே 5000, 3000, 2000 ரூபா பணப்பரிசும் ஏனைய ஒன்பது சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

மேற்படி போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப் படாதவையாக இருக்க வேண்டும். போட்டியில் பங்கு பற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்துத் தபால் உறையின் இடதுபக்க மூலையில் ''அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தப் போட்டி'' எனக் குறிப்பிட்டு அடுத்தமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் போட்டிக்கான ஆக்கங்களை ஞானம் கிளை அலுவலகம்,3-பி, 46 ஆவது ஒழுங்கை, கொழும்பு-06' என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். (201-55)

# யாழ்.விழிப்புலன் அற்றோர் சங்கத்திற்கு சுயதொழில் உதவிகள் வழங்கப்பட்டன



யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் சுயதொழில் உற்பத்தியை அண்மையில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தது.

உள்ளூர் விளக்குமாறு,தும்புத்தடி, கதிரை பின்னுதல், காகித உறை அமைத்தல் போன்றவை விழிப்புலனற்றோரால் மேற்படி சங்கத்தில் விரைவில் இடம்பெறவுள்ளன.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுயதொழில் முயற்சிக்கெனஒரு தொகுதி உற்பத்திப் பொருள்களையும் நிதி உதவியையும் இந்தச் சங்கத்திற்கு வழங்கியுள்ளது.

மேற்படி உற்பத்திப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு சங்கத் தலைவர் ப.கிரிதரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சங்கத் தலைவர் தனது நிதியில் இருந்து பத்து ஆயிரம் ரூபாவையும் சங்க நிதியிலிருந்து பத்து ஆயிரம் ரூபாவையும், மற்றும் அறுபது ஆயிரம் ரூபா பெறுமதியான உற்பத்திப் பொருள்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் இயக்குநர் ச.டொமினிக்,பொது முகாமையாளர் ரி.மனோகரன், சமாசப்பொது முகாமையாளர் அ.பஞ்சாட்சரம், விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆ.மகேந்திரன் பொருளாளர் வி.கனகசபை, உபசெயலாளர் இ.ஸ்கந்தராசா, நிர்வாக உறுப்பினர் யோ.ஜெயசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (201-224)

## வலி.தென்மேற்கில் மரக்கறிச்சந்தை புனரமைக்கப்படவுள்ளது

ஆனைக்கோட்டை.பெப்.25

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் கீழ் உள்ள பொதுச்சந்தையில் மரக்கறிச் சந்தை புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகச் சபைச் செயலாளர் பு.சிவலிங்கம் தெரிவித்தார். இந்த மரக்கறிச்சந்தை தற்காலிக கொட்டகையிலேயே இயங்கி வருகின்றது. இது பழுதடைந்துள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து இதனைப் புனரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். சபையின் 2009 இற்கான நிதியில் இருந்து இந்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன்சந்தைக்கான குடிதண்ணீர் விநியோகம், சுற்று வேலியமைத்தல் போன்ற வேலைகளும் மேற்கொள்ளப் படவுள்ளன. (203-20)







வல்லை சிதம்பராக் கல்லூரியில் சேவாலங்கா நிறுவனத்தால் நடத்தப்பட்ட சர்வதேச தாய்மொழிதின நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.
நிகழ்வில் வல்லை மக்கள் இசைக் குழுவினர் பக்திப் பாடல் இசைப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வின் ஒரு காட்சியையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சைவப்புலவர் [illegible] உரையாற்றுவதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# B.Sc. in Computer Science

Course Duration 30 Months and 6 Months Training with A/L 2S

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC)அங்கீகாரமும், சர்வதேச அங்கீகாரமும் உடைய சான்றிதழ் வழங்கப்படும்

அரச உத்தியோகத்தர், ஆசிரியர்கள் கல்வியற் கல்லூரியைப் பூர்த்தி செய்தவர்கள், வங்கிகளில் பணி புரிவோர்களுக்கும் அரிய சந்தர்ப்பம்

06-03-2009 விரிவுரைகள் ஆரம்பம்

# B.Sc. in Multimedia-1st Year

1st Year யை எமது நிறுவனத்தில் பயின்று 2nd, 3rd Years யை வெளிநாடு ஒன்றில் (Netherlands, New Zealand, UK, Malta(Italy), Malaysia) பூர்த்தி செய்யமுடியும். இதற்கான VISA + Part Time Job போன்ற ஒழுங்குகள் அனைத்தும் NOTTINGHAM COLLEGE OF LONDON உடன் இணைந்து NORTH LANKA IIT வழங்குகின்றது

# North Lanka IIT

Main Street, Chankanai. Phone- +94602214305

New College of Higher Studies No:95, Ariyakulam Jaffna

NOTTINGHAM COLLEGE OF LONDON Phone- +94112598059

North Lanka IIT is your right choice for your Degree Education


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

### நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 28 |
| 03 | 01 |
| 1943 | 2009 |

## அமரர் சிவசம்பு கருணானந்தன்

(ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு பரிசோதகர் - I.P.T அஞ்சல் தொலைத் தொடர்புகள் திணைக்களம்)

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பல்கலையும் நீகற்று பார்போற்றப் பண்புடனே
தொலைத் தொடர்பு சேவையதில் தொழில்நுட்ப வல்லவனாய்
சிறப்புடனே நீ வாழ்ந்து காலனது கைப்பட்டு
திங்கள் ஒன்று ஆனதுவோ நெஞ்சம் உள்ள மட்டும் நாம் மறவோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவனின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் செய்து, அஞ்சலிகள், ஆறுதல்கள் தெரிவித்து மரணச் சடங்கில் கலந்துகொண்ட அன்பு உள்ளங்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வுகள் நாளை (26.02.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதோடு, மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

### வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 26 |
| 02 | 01 |
| 1947 | 2009 |

## அமரர் செல்லையா தவரத்தினம்

(நீர்வேலி ப.நோ.கூ.சங்க ஓய்வுபெற்ற சாரதி)

அதிசயஞ்சேர் கலியுகத்து சர்வதாரி ஆண்டு தையில்
மதிவளரும் பூர்வபக்கப் பிரதமையோ - பதியவனாம்
மதிநலத்தான் நற்தவரத்தினம் இறையின் பதம் அதனை
கதியெனச்சேர் முத்தித் திதி

அன்னாரின் இறுதிக் கிரியைகளின்போது சகல வழிகளிலும் உதவி நல்கிய அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (25.02.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிராமணோடை,
கோப்பாய் வடக்கு.

குடும்பத்தினர்.

(சி/557258)

## சைவநெறித் தேர்வு முடிவு வெளியாகியது

யாழ்ப்பாணம்,பெப்.25

சைவபரிபாலன சபையால் 2008ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அகில இலங்கை சைவ நெறித் தேர்வுப் பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சைவபரிபாலன சபையின் தேர்வுச் செயலர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார்.

(203)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.25

கைதடி கலைவாணி வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் கலந்துகொள்வார்.

(203-288)

## நாவலர் வீதி சீரமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ்.நாவலர் வீதி சீரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம் பெற்று வரும் இந்த சீரமைப்புப் பணியில் வீதியில் உள்ள குழிகள் தார் கலவை மூலம் சீர் செய்யப்பட்டு வருகின்றன.

(203-224)

## நாச்சிமார் கோயில் சுற்றுவீதி மூடப்பட்டது

வண்ணை,பெப்.25

யாழ்.வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார்) கோயில் சுற்றுவட்டம் மூடப்பட்டது.

யாழ்.கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள மேற்படி ஆலயத்தின் தெற்கு, மேற்கு, வடக்கு வீதிகள் உள்ளிட்ட பகுதிகள் தற்காலிக இரும்பு வேலிகளைக் கொண்டு மூடப்பட்டுள்ளன.

ஆயினும் ஆலய விசேட தினங்களில் மேற்படி வீதிகள் திறந்து போக்குவரத்துக்கு விடக்கூடிய முறையிலேயே இரும்பு வேலிகள் போடப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் கே.கே.எஸ். வீதியை முகப்பாகக் கொண்ட ஆலய தெற்கு மற்றும் வடக்கு வீதிகள் எதுவித அடைப் [illegible] இருந்து வந்தன.

(1-160)

## கல்விச்சாலைக் காட்சிகள்



அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியினை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ் மாறன் ஆரம்பித்து வைக்கின்றார்.

அருகில் விருந்தினர்களான எஸ்.செல்வநேசன், ஓய்வுபெற்ற உப அதிபர் த.நடராஜா, உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா, கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் சி.சுபாஸ்கரன் ஆகியோரும் நிற்கின்றனர்.

(படம்: க.நாகலிங்கம்)



• நவாலி மகா வித்தியால்ய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகிழ்மகாதேவன் விருதுகளையும் கேடயங்களையும் மாணவர் ஒருவருக்கு வழங்கிக் கௌரவிப்பதையும் -

அருகில் பாடசாலை அதிபர் இரா.வசந்தகுமார், உடற்கல்வி ஆசிரியை திருமதி வி.பேரின்பம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(95)



மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற இல்லத்துக்கான வெற்றிக்கேடயத்தை இல்லத் தலைவர்களிடம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோட்டக் கல்வி அதிகாரி ந.சத்தியநாதன் வழங்குகின்றார்.

(59)



நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

போட்டியில் பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை படத்தில் காணலாம்.

(படம்: குமார்)



மட்டுவில் கமலாசினி மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவிக்கு பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி ஈஸ்வரி ஜீவகதாஸ் வெற்றிக் கேடயம் வழங்குகின்றார்.

(படம்: மண்டுவில் செய்தியாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வடக்கின் மாபெரும் போர்' நாளை கோலாகலமாக ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.25

'வடக்கின் மாபெரும் போர்' (Battle of the North) என வர்ணிக்கப்படும் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் துடுப்பாட்டப் போட்டி நாளை வியாழக்கிழமை மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை வரை இந்தப் போட்டி நடைபெறும்.

வருடந்தோறும் பெரும் எதிர்பார்ப்புடன் இந்தத் துடுப்பாட்டப் போட்டி நடைபெறுவது வழக்கமாகும்.

103ஆவது போட்டியாக அமைந்துள்ள இப்போட்டியில் சென்.ஜோன்ஸ், சென்ரல்


யாழ்.மத்திய கல்லூரி அணி

ஆகிய இரு அணிகளும் தாம் எப்படியும் வெற்றிபெற வேண்டும் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்குகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ்.மத்திய கல்லூரி இந்தத் துடுப்பாட்டத்தில் வெற்றியீட்டியுள்ளது.

இரு கல்லூரிகளுக்குமிடையே இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் 33 ஆட்டங்களில் சென்.ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 24 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது. 37 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளதுடன் 7 போட்டிகள் நடைபெற்றபோதிலும் அதற்கான பதிவுகள் இல்லை. மழையினால் ஒரு போட்டி தடைப்பட்டுள்ளது.

## சென்.ஜோன்ஸ், சென்ரல் அணிகள் சமவலிமையுடன் களத்தில்

### சென்.ஜோன்ஸ் அணி

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியைப் பொறுத்தவரை இவ்வாண்டு இதுவரை ஏழு போட்டிகளில் கலந்துகொண்டுள்ளது. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை இனிங்ஸாலும் 227 ஓட்டங்களாலும் வென்றுள்ளதுடன், அதிக ஓட்டங்களையும் பெற்றுள்ளது. அத்துடன் சென்.ஜோன்ஸ் கல்லூரி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை 5 விக்கெட்டுகளாலும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை 7 விக்கெட்டுகளாலும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியை 8 விக்கெட்டுகளாலும் வென்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியை 81 ஓட்டங்களாலும் யாழ்ப்பாணம் சென்.பற் றிக்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றை முதல் இனிங்ஸாலும் வென்றுள்ளது.

இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் சென்.ஜோன்ஸ் அணி வீரர்களான ஹரி பிரவின் 4 அரைச்சதங்களையும் விதுசன் 5 அரைச்சதங்களையும், ஹரிவதனன் ஓர் அரைச்சதத்தையும், பிரணவன் ஒரு சதத்தையும் ஓர் அரைச்சதத்தையும் பெற்றுள்ளனர்.

பந்துவீச்சில் தவநீதன் இரு தடவைகள் 5 விக்கெட்டுகளையும், ஹரிபிரவின், கஜீவன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை இரு தடவையும் கைப்பற்றியுள்ளனர்.

அணியில் நான்கு வருட அனுபவம் பெற்ற பிரணவன், ஹரிபிரவின் ஆகியோரு டன் மூன்று வருடம் அனுபவம் பெற்ற வீரர்களான தவநீதன், கஜீபன், விதுசன், ஹரிவதனன் ஆகியோரும் இரண்டு வருட அனுபவம் பெற்ற வீரர்களான சுதாகரன், எவோன்சன், பிரியதர்சன், ஜெயந்தன், அலெக்ஸ் டியோன் அடிரன் ஆகியோர் உள்ளனர். கஜரூபன், சஞ்சீவன், சவிதன், விமல்ராஜ் ஆகியோர் புதுமுக வீரர்களாகக் களமிறக்கப்படுகின்றனர்.

சென்.ஜோன்ஸ் அணியில் நான்கு இடதுகை துடுப்பாட்ட வீரர்களும், மூன்று சுழல் பந்துவீச்சாளர்களும், வேகப்பந்து வீச்சாளர்களும் இடம்பெற்றுள்ளனர்.


யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி

### யாழ்.மத்திய கல்லூரி அணி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு இதுவரை ஏழு போட்டிகளில் விளையாடியுள்ளார்கள். இப்போட்டிகளில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றை இனிங்ஸாலும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிகளை விக்கெட்டுகளினாலும் வென்றுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை முதல் இனிங்ஸில் வென்றதுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிடம் முதல் இனிங்ஸினால் தோல்வியும் தழுவியுள்ளது.

இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் செல்ரன், ஜெனோசன், ஜேம்ஸ் ஜான்சன் ஆகியோர் சதம் பெற்ற வீரர்களாகவும் ஜெனோசன், எட்வேட் எடின், ஜெகத் துஷாந் ஆகியோர் தலா இரண்டு அரைச்சதங்களைப் பெற்ற வீரர்களாகவும் கோபிகன், ஸ்ரீபன்ராஜ் ஆகியோர் தலா ஓர் அரைச்சதத்தைப் பெற்ற வீரர்களாகவும் உள்ளனர்.

இந்த அணியில் ஒரு தடவையில் ஐந்து விக்கெட்டுகளுக்கு மேல் கைப்பற்றிய பந்துவீச்சாளர்களாக கோபிகன், தனுசன் ஆகியோர் உள்ளனர். ரதீசன், செல்ரன், தனுசன், அலன் குமார், ஸ்ரீபன்ராஜ் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர்.

மத்திய கல்லூரி அணியில் செல்ரன் 5 வருடம் அனுபவமும், ஜேம்ஸ் ஜான்சன் 4 வருட அனுபவமும், ஸ்ரீபன்ராஜ் 3 வருட அனுபவமும், சிவகரன், கோபிகரன், தனுஜன், ஜெனோசன், ஜெரித், துஷாந், அலென்குமார், லவேந்திரன்ஆகியோர் 2 வருட அனுபவமும் ரதீசன், எட்வேட்டின், ஹரிஸ், தர்சன், பில்சன், டனிசன், டர்சன் ஆகிய புதுமுகங்களும் இடம் பெற்றுள்ளார்கள்.

அணி வீரர்கள் அனைவரும் வலதுகை துடுப்பாட்ட வீரர்களாக காணப்படுகின்றனர். அத்துடன், வேகப்பந்து வீச்சாளர்களையும், நான்கு சுழல்பந்து வீச்சாளர்களையும் கொண்ட பலமான அணியாக இந்த அணி காணப்படுகின்றது.

### சம வலிமையுடன் இரு அணிகளும்

குறிப்பாகப் பார்க்கப்போனால் இரு அணிகளும் பலமான அணிகளாகக் காணப்படுகின்றன. அனுபவமும் திறமையும் உள்ள வீரர்கள் பலர் இரு அணிகளிலும் உள்ளனர்.

இரு அணிகளும் கடந்த போட்டிகளில் கூட்டுப் பொறுப்புடன் விளையாடியுள்ளதுடன், போட்டியில் ஒரு வீரர் துடுப்பெடுத்தாடுவதிலோ அன்றி பந்துவீச்சிலோ பின்தங்கினால் அதனை அடுத்த வீரர் ஈடு செய்து விளையாடும் நிலையும் காணப்படுகின்றது.

ஒட்டுமொத்தத்தில் இம்முறை நடைபெறவிருக்கும் 'வடக்கின் மாபெரும் போர்' பலத்த சவால் நிறைந்த போட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட்டுக்கான ஆதரவு வெகுவாக அதிகரித்து வரும் நிலையில் கிரிக்கெட் ரசிகரிகளிடையேயும் இந்தப் போட்டி எதிர்பார்ப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு:
அதிரன், நேசன்

---

# உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது உடன் விரைந்து உதவி செய்யுங்கள்

## அனைத்துலக கிறிஸ்தவ சமூகத்திடம் வன்னி மக்கள் வேண்டுகோள்

வன்னியில் வாழும் மக்களின் வாழ்வு கேள்விக்குறியாகியுள்ளது. உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையிலேயே நாம் உங்களுக்கு ஓர் அவசர வேண்டுகோளை விடுக்கிறோம். எம்மைக் காப்பாற்றுவதற்கு உடன் விரைந்து செயற்படுங்கள்.

இவ்வாறு வன்னியில் உள்ள அருட்பணியாளர்களின் சார்பில் அருட்திரு. க.சாம் இராஜேந்திரன் அனைத்துலக கிறிஸ்தவ சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிம்மதியும் நிரந்தர வாழ்வும் தொலைந்து போன நிலையில் மரணத்தின் விளிம்பில் நின்றுகொண்டு இறுதிமூச்சைப் பிடித்தபடியே அனைத்துலக கிறிஸ்தவ சமூகத்திற்கு இந்த அவசர அறைகூவலை விடுக்கின்றோம்.

கொடிய போர் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் விடுதலைப் புலிகளாகவே இருக்க, விடுதலைப் புலிகளை அழிக்கின்றோம் என்ற பெயரில் சிறிலங்கா அரசால் தமிழ்மக்கள் நாள்தோறும் மிகவும் மோசமான முறையில் கண்கொண்டு பார்க்கமுடியாத வகையில் கொன்று குவிக்கப்படுகின்றனர்; காயப்படுத்தப்படுகின்றனர்.

வானூர்தி மற்றும் எறிகணை வீச்சால் உடல் சிதறிப் பலியாகும் மக்களின் உடல்களை உரப்பைகளில் (பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் இரசாயன உரம் கொண்டிருந்த பைகள்) அள்ளியெடுக்கும் அந்த நெஞ்சைப் பிழியும் கோரக்காட்சிகளை எப்படி மறப்பது.

தன் தகப்பனின் சிதறிய உடலை ஒரு பையில் அள்ளியெடுத்த 16 வயது மகனின் மன நிலையை எப்படி எழுதுவது?

உடல் சிதறிப் பலியானவர்களையோ அல்லது காயமடைந்தவர்களையோ அந்த இடங்களில் இருந்து அப்புறப்படுத்தவோ, காயப்பட்டவர்களுக்கு உதவுவதோ மிகவும் கடினமான விடயமே.

ஏனெனில் அந்த இடங்களில் 1,000 தொடக்கம் 6,000 வரையான எறிகணைகள் நாள்தோறும் அரச படைகளால் எறியப்பட்ட வண்ணமே இருக்கும்.

மழை போல் விழும் இந்த எறிகணைகளின் மத்தியில் மீட்புப் பணிகளை எவ்விதம் செய்யமுடியும்.

இவை அர[illegible] அறிவிக்கப்பட்[illegible] நடை பெறுகின்றன.

எனவே இப்பிரதேசம் மக்களால் கொலை வலயம் என்றே அழைக்கப்படுகின்றது.

இப்போது மோதல் நடைபெறும் இடங்களில் மருத்துவமனை என்று ஒன்றில்லை.

பாடசாலை மற்றும் மர நிழல்களில் சிறியளவிலான சிகிச்சைகள் நடைபெறுகின்றன.

இருப்பினும் மருத்துவ அதிகாரியோ, மருந்துகள் எதுவும் இல்லை. இதனால் காயப்பட்டவர்கள் இறக்கும் சந்தர்ப்பங்களே அதிகம் உள்ளன என்கிறார்.

அதேசமயம் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் அரசாங்கம் வெளியேற்றிவிட்டது.

தொண்டுநிறுவனங்களோ, ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளோ இங்கு இல்லை.

இங்கு மக்கள் மிகவும் கொடூரமான முறையில் கொல்லப்படுகின்றனர்; காயப்படுத்தப்படுகின்றனர். அதிலும் கர்ப்பிணித் தாய்மார்களும், குழந்தைகளும், சிறுவர்களும் மிகவும் கோரமான முறையில் கொல்லப்படுவதை வார்த்தைகளால் விளக்கவே முடியாதுள்ளது.

[illegible] வலயம் என்ற பெயரில் மக்[illegible]லப்பரப்புக்குள் அடைக்கப்பட்டுள்ளனர். அங்கு எறிகணை மற்றும் சுகாதாரச் சீர்கேட்டினால் உண்டான நோயாலும், பட்டினியாலும் மக்கள் செத்துக்கொண்டே இருக்கின்றனர்.

போரின் வலிமையையும், வலியையும் தாங்கமுடியாமல் தவிக்கின்றனர்.

போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் என்ற நிலைப்பாட்டை அனைத்துலகம் எதிர்பார்த்த வண்ணம் மக்கள் சாவின் விளிம்பில் உள்ளனர்.

சிறிலங்கா அரசோ சகல கதவுகளையும் இழுத்து மூடியுள்ளது. தமிழ் மக்கள் அதனைத் திறக்கும் பலமான கரங்களாக இந்திய மத்திய அரசையும், அமெரிக்காவையும், ஐக்கிய நாடுகள் சபையையும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

இந்த கரங்களைச் செயற்பட வைப்பது யார்?

இதனைச் செயற்பட வைக்கக்கூடியவர்களாக இறைவனால் இந்த பூமியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள உலகளாவிய கிறிஸ்தவ சமூகத்தையே நாம் முன் மொழிகின்றோம்.

அதுவே உண்மையும் கூட.

வன்னியில் நடைபெறும் இந்தப் பேரவலம் நிறுத்தப்பட சிங்கள மற்றும் இந்திய முதலான அனைத்துலக கிறிஸ்தவ சமூகம் எழுந்து செயற்படவேண்டும்.

அனைத்துலக கிறிஸ்தவ சமூகமே உங்கள் உறவுகள், சகோதர, சகோதரிகள் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்.

உடன் விரைந்து செயற்படுங்கள்.

இறைவன் உங்களை ஆசீர்வதிப்பார்களாக என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற வெள்ளிவிழாவை முன்னிட்டு நிறுவப்பட்டதே இந்த ஒளவையார் சிலை. 09.07.1974 அன்று இந்தச் சிலை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் திரைநீக்கம் செய்யப்பட்டது. ஏறக்குறைய 35 வருடங்களாக போரின் விழுப்புண்களையும் தாங்கிக்கொண்டு யாழ்.நகரின் மத்தியில், ஆஸ்பத்திரி வீதியில் சிதையாமல் நிமிர்ந்து நிற்கிறார் ஒளவையார்.

தொகுப்பு: ஒளணயன்



தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுப்பது மிகப் பெரிய புண்ணியம். அந்தப் புண்ணியத்தைத் தமிழர்கள் காலம் காலமாகவே செய்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு இந்தப் பழைய தண்ணீர்த் தொட்டியே சாட்சி. முன்னைய காலங்களில் மக்கள் போக்குவரத்து அதிகமுள்ள இடங்களிலும் முக்கியமான தெருக்களிலும் நன்னீர் நிரப்பியபடி இத்தகைய தொட்டிகள் அமைக்கப்பட்டிருக்கும். களைப்புறும் மக்கள் தொட்டியில் உள்ள நீரை அருந்தித் தமது தாகத்தைத் தணித்துக் கொள்வர். ஆனால் நாகரிக உலகத்தில் இத்தகைய தொட்டிகள் இல்லாமலே போய் விட்டன. சங்கானைச் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள இந்த தண்ணீர் தொட்டி இன்று பயன்பாடற்று வெறும் காட்சிப் பொருளாகவே உள்ளது. (படமும்,தகவலும்: காந்தன்)



இது கோண்டாவில் ஆசிமடம். 1850 களில் அமைக்கப்பட்ட இம் மடத்தின் பெயராலேயே அதன் எதிரே உள்ள விநாயகர் ஆலயமும் அழைக்கப்படுவது அனைவரும் அறிந்ததே. இந்த மடம் பழைமைவாய்ந்த ஆலமரத்தின் மிக விரிந்த நிழலின் கீழ் அமைதியான சூழலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. தெருவால் செல்வோரிடம் இம் மடத்தில் சிறிது அமர்ந்துவிட்டுச் செல்ல வேண்டும் எனும் எண்ணத்தைத் தூண்டுவதாக இம்மடம் இருந்தது. ஆனால் மனிதர்கள்தான் எமது பழமைகளையெல்லாம் அழிக்கிறார்கள் என்றால் இயற்கையும் விட்டு வைக்கவில்லை. சென்ற கார்த்திகையில் யாழ்ப்பாணத்தை உலுக்கிய 'நிஷா' எழில்மிகு இதன் சூழலையும் அழித்து விட்டது.

(படமும்,தகவலும்:- சோ.குமுதா)



உலகில் வெகுவேகமாக அழிந்துவரும் உயிரினங்களில் ஒன்றாக பண்டா இனக் கரடிகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த சில இடங்களில் மட்டுமே வாழ்கின்ற பண்டாக் கரடிகள் மிகவும் சாதுவானவை. அத்துடன் சூழலின் சமநிலையைப் பேணுவதிலும் இவை முக்கியம் பெறுகின்றன. இதனால் பண்டாக் கரடிகள் பற்றிய விழிப்புணர்வை உண்டு பண்ணும் நிகழ்வுகள் உலகெங்கும் நடைபெற்று வருகின்றன. அவுஸ்திரேலியாவில் டெஸ்மானியாத் தீவில் நடைபெற்ற பண்டாக் கரடிகளைக் காப்பது பற்றிய நிகழ்வில் ஒய்யாரமாக அமர்ந்திருக்கும் பண்டாக்களைப் படத்தில் காணலாம்.



பாம்பென்றால் படையும் நடுங்கும். ஆனால் படையாகப் பாம்புகள் வந்தால்...? அதைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள வயற் கிணற்றில் கடந்தவாரம் சில நாகபாம்புகள் தென்பட்டன. தண்ணீருக்குள் நீந்தியபடி படமெடுக்கும் நாகபாம்புகளைக் காண்பதற்கு பெருந்திரளானோர் முண்டியடித்தனர். படமெடுக்கும் பாம்புகளை நாமும் படம் எடுத்துக் கொண்டோம்.

(படமும்,தகவலும்: காந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணமடைந்தவர்களின் உறுப்புக்களை அகற்ற டாக்டர்களுக்குப் பூரண அதிகாரம் → இந்தியாவில்



இந்தியாவில் நோயினால் பீடிக்கப்பட்டு உறுப்பு மாற்றுச் சிகிச்சையை எதிர்பார்த்துப் பல இலட்சம் மக்கள் காத்திருக்கின்றனர். குறிப்பாக விழிகளைத் தானமாகப் பெற்று மாற்றீடு செய்வதற்கு இரண்டு இலட்சம் பேர்வரை காத்திருக்கின்றனர். இருப்பினும் 15 ஆயிரம் விழிகள்தான் தானமாகக் கிடைத்திருக்கின்றன.

இதனால் பார்வையிழப்போர் எண்ணிக்கை, இந்தியாவில் வருடாந்தம் அதிகரித்து வருகிறது.

## தகவல் பெட்டகம்

எனவே இதனை நிவர்த்தி செய்யும் முகமாக அரச வைத்தியசாலைகளில் நோயாளிகள் மரணமடைந்தால் அல்லது மூளை முற்றிலும் செயலிழந்தால், உறவினர் ஒப்புதல் பெறாது அவர்களின் கண்களை அகற்றுவதற்கு டாக்டர்களுக்குப் பூரண அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அங்கு 'கிட்னி' செயலிழப்பும் பாரிய பிரச்சினையாக மக்களை வருத்துகிறது. அதேவேளை இதய நோயால் பீடிக்கப்பட்டுப் பலர் உயிரிழப்பதும், உறுப்புக்கள் செயலிழப்பதால் பலரது வாழ்க்கை சூனியமாவதும் சாதாரண நிகழ்வு. இப் பிரச்சினைக்குத் தீர்வாக இறந்தவர்களின் உடல் உறுப்புகளை, அவர்களது உறவினர் அனுமதியின்றி அகற்றுவதற்கு டாகடர்களுக்குப் பூரண அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டமாகக் கண்களை அகற்றுதல் கட்டாயமாக்கப்பட்டு அவற்றைக் கண்வங்கிகளில் பாதுகாப்பாக வைத்திருக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஸ்பெயின் மற்றும் சிங்கப்பூர் மருத்துவமனைகளில் இவ்வகை அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றது. இதனால் தேவையான நோயாளிகள் உறுப்பு மாற்று சிகிச்சை செய்து சந்தோஷமாக வாழ்கின்றார்கள்.

இந்தியாவில் உயிர் வாழ்கின்றவர்கள் உறுப்புகளைத் தானமாக வழங்கினால் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் இலவச மருத்து சோதனையும், 50 வீத ரயில் கட்டணக்கழிவும், அவர்களது பிள்ளைகளுக்கு உடல் உறுப்பு தேவைப்பட்டால் முன்னுரிமை வழங்குதலும் விஷேட சலுகை களாக வழங்கப்படுகின்றன.★


எஸ்.பேராசிரியன்.




# ரயில்களிலும் பறப்போம்



பறக்கும் ரெயில்



நீராவியின் உதவியுடன் தன் பயணத்தைத் தொடங்கி, தத்தித் தவழ்ந்த ரயில்கள் படிப்படியாக நடந்து அதன் பிறகு ஓடி, இன்று டீசல் வகை, மின் சார வகை, காந்த வகை என்று பல்வேறு அவதாரம் எடுத்து, அடுத்த அவதா ரமாக வரப்போகிறது 'ஆகாய ரயில்'.

ரயிலில் அமர்ந்து மணிக்கு 500 கிலோ மீற்றர் என்ற வேகத்தில் அப் படியே சொகுசாகக் காற்றில் மிதந்து சென்றால் எப்படியிருக்கும்?

ஜப்பானில் சென்டாய் நகரத்தில் உள்ள தோஹஹ பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த யசுக்காய் கொஹாமா என்பவரின் ஆராய்ச்சியால் இது போன்ற 'பறக்கும் ரயில்' வரவிருக்கிறது. ரயில்கள் இயங்குவதற்கு உதவும் பொறி கள் நீராவி, டீசல் மற்றும் மின்சாரம் கொண்டு இயங்குபவை. மின்சார ரயில்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்டுச் சக்கரங்களைத் தண்டவாளத் தில் ஓட வைத்து ரயிலை இயக்குகிறது. இந்த முறையில் மேம்படுத்தப் பட்ட தொழில்நுட்பத்தில் சில ரயில்கள் அதிவேகத்தில் இயங்குகிறது.

இந்தவகை ரயில்களில் ஒன்றான தோஹோமியின் உச்சவேகம் மணிக்கு 300 கிலோ மீற்றர் ஆகும். இவற்றின் அடுத்த அவதாரமே காந்தம் கொண்டு மிதந்து ஓடும் மேக்லிவ் ரயில்கள். மேக்லிவ் ரக ரயில்கள் அதிவேக மாக வும், சொகுசாகவும் செல்லும் திறன் கொண்டதாக இருந்தாலும், இதனை இயக்க அதிக அளவில் மின்சாரம் செலவழிக்கப்படுகின் றது. ஆனால் தோஹாமாவில் பறக்கும் ரயில் எளிதான வடி வமைப்பைக் கொண்டதாக இருக்கப் போகிறது. இதற்கு 'நிலப்பரப்பில் சிறகடிக்கும் இறக்கை' என்றே பெயர் வைத்து விட்டார்கள். இந்த ரயில் 'L' (ஆங்கில எழுத்தான எல்) வடிவமுடைய இறக்கையின் மேல்செல்லும். இறக் கையின் அடிப்பாகம் ரயிலைத் தூக்கி நிறுத்தத் தேவையான விசையைக் கொடுக்க, நிலத்திலிருந்து 5.10 செ.மீ உயரத்தில் ரயில் மிதக்கும். பக்கவாட்டு இறக்கைகள் ரயிலை அதன் பாதையில் நிலைநிறுத்த உதவி புரிகிறது. இங்கு தண்ட வாளங்களுக்குப் பதிலாக சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கும். இதன் முழு இயக்கமும் தானியங்கி முறையில் இருக்கும். முன்னோக்கிச் செல்வதற்காக இயக்குவிசை இயந்திரங் கள் பொருத்தப்படுகின்றன. இதன் சக்கரங்கள், விமானத்தின் ஓடுதள இறக்குக் கருவி (LANDING GEAR)யின் இயக் கத்தை ஒத்து இருக்கும். ரயில் நிலையத்திற்கு அருகே வந்தவுடன் சக்கரங்கள் கிழிறங்கி ஓடத்துவங்கும். சோதனை ஓட்டத்திற்காக மாதிரி ரயிலை வடிவமைத்து ஆராய்ச்சியில் ஈடுபட் டுக் கொண்டிருக்கிறார் கொஹாமா. முதலில் இயக்குவிசை இயந்திரங்கள் பொருத்தப் பட்டு மணிக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் (மிதப்பதற்கு முன்) இந்த மாதிரி ரயில் இயக்கப்பட்டது. ஆராய்ச்சியில் முனைப்புடன் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்கள் எப்படியும் இதனை வெற்றிகரமாகச் செயல்படுத்துவோம்' என நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள். இது வெற்றி யடைந் தால் 2020 ஆம் ஆண்டில் இந்தப் பறக்கும் ரயில் 335 பயணிகளுடன் மணிக்கு 500 கிலோ மீற்றர் வேகத்தில் தன் பயணத்தைத் தொடங்கும். நம்முடைய நாட்டிலும் இதுபோல் ரயில்கள் எப்பொழுது வரப்போகிறது என்று ஏக்கப் பெருமூச்சு வருகிறதா?



அமெரிக்காவில் உள்ள மேக்லிவ் ரெயில்

# ஞாபகமறதியா? கவலை வேண்டாம்...!



பாடசாலை, கல்லூரிப் பரீட்சைகள் பற்றிக் கவலையா? அல்லது குறிப்பிட்ட தொலைபேசி அல்லது கைத்தொலைபேசி எண்களை மறந்து விடுகிறீர்களா? இனிக் கவலை வேண்டாம். ஞாபக சக்தியைப் பெருக்கி, நினைவாற்றலை மேம்படுத் துவதற்குப் புதிதாக மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது.

பரீட்சைக்குத் தேவையானவற்றை மறுநினைவூட்டுவதற்கும், முக்கிய தினங்களை மறந்து விடுவதைப் போக்குவதற்கும் மாத்திரை ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அல்ஸிமெர் நோயாளிகளுக்காகக் கண்ட றியப்பட்டுள்ள இந்த மாத்திரையானது, அடுத்த சில ஆண்டுகளில் நினைவாற் றல் திறனுக்காகவும் விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயோதிபத்தால் ஏற்படும் ஞாபக மறதியைப் போக்கும் வகையில் அமெரிக்க மருந்து நிறுவனங்கள் இணைந்து இந்த மாத்திரையைத் தயாரித்துள்ளன.

மூளையை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மாத்திரை கள் தற்போது பிரிட்டனில் ஆரோக்கியமான உடல்நிலையுடன் இருப் பவர்களால் பயன்படுத்தப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக் கின்றன. ★★★

# எழுவோம்



விழுந்த
தென்னை, பனைகளுக்கு
பதிலாக....
மனிதர்களாகிய நாமே!
மீண்டும் எழுவோம்....
இன்னொரு 'நிஷா'வை
நம் இதயத்தில்....
சந்திக்காமல் இருப்பதற்கு.

சா.ரமேஸ்குமார்,
மீசாலை கிழக்கு.

# அதிசயம்

அதிர்ச்சியையும்
ஆச்சரியத்தையும் - நீ
ஒரே தடவையில்
கொடுத்திருந்தாய்!
புன்னகைத்தபடி முறைத்துக் கொண்டதால்.

வி.முகிலன்,
நெருந்தீவு - 15.

# நினைவுகளோடு....



மேகமே....
விண்ணில் யாரைத் தேடி
அலைகிறாய்....
என்னைப் போல
நீயுமா...
பலராலும்
ஏமாற்றப்பட்டு...
நிம்மதியினைத் தேடி
அலைகிறாய்....
இனியும்
அ(வ)ர் க(ளு)க்காக என்னால்
கண்ணீர் விட
முடியாது ஏனெனில்
என் கண்களில்
ஈரமில்லை....

மகே-மேனன்,
கொற்றையூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழமைக்கு மாறாக 8 அடி உயரமான சைக்கிளை ஓடிய நபருக்குத் தண்டப்பணம்

வலி.வடக்கு,பெப்.25

பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் வழமைக்கு மாறாக 8 அடி உயரமான சைக்கிளை வீதியில் ஓடிச் சென்றவருக்கு ஆயிரத்து 600 ரூபா தண்டமாக அறவிடப்பட்டது. அத்துடன் குறிப்பிட்ட சைக்கிளையும் நீதிமன்றம் பறிமுதல் செய்தது.

இந்தவிடயம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:

அண்மையில் காங்கேசன்துறை வீதியில் 8 அடி உயரமான சைக்கிள் ஒன்றை ஒருவர் ஓடிச்சென்றுள்ளார்.

வீதிக் கடமையில் ஈடுபட்டிருந்த சுன்னாகம் பொலிஸார் குறிப் பிட்ட நபரை வழி மறித்தபோது அவர் சைக்கிளை உடனடியாக நிறுத்தமுடியாது சென்றார்.

அவரைச் சிறிது தூரம் துரத்திச் சென்ற பொலிஸார் சைக் கிளைப் பிடித்து நிறுத்தி அவரைச் சைக்கிளில் இருந்து இறக்கி யுள்ளனர். இந்தக் குற்றம் தொடர்பாக அவர் மல்லாகம் நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர்செய்யப்பட்டார்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதி வான் ஆயிரத்தி 600 ரூபா தண்டப்பணமாக அறிவிட்டதுடன் குறிப்பிட்ட சைக்கிளை யும் பறிமுதல் செய்யுமாறு பொலிஸா ருக்கு உத்தரவிட்டார்.

(203-86)

## கியூடெக் நிறுவனம் உடுபுடைவைகள் வழங்கியது

வண்ணை,பெப்.25

'நிஷா' புயல் மற்றும் பெருவெள்ளம் காரணமாக கோண்டாவில் கிழக்கு ஜே116 கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட 41 குடும்பங்களுக்கு உடு புடைவை அடங்கிய பொதிகள் வழங்கப் பட்டன.

கோண்டாவில் புகையிரத நிலையப் பகுதியை அண்மித்துள்ள பிள்ளையார் கோயிலில் வைத்து கியூடெக்- கரித்தாஸ் நிறுவனத்தால் குடும்ப அங்கத்தினர் அள வுக்கு உகந்த முறையில் உடுபுடைவை அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(1-160)

## மருந்தாளர் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

கோப்பாய், பெப்.25

இலங்கை மருத்துவ சபையால் மருந் தாளர் (வெளிவாரி) பரீட்சையில் தோற்று வதற்காகப் பொருத்தமான விண்ணப்பதா ரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இப் பயிற்சி நெறியைப் பின்பற்ற வய தெல்லை இல்லை. ஜி.சீ.ஈ. சாதாரண தர ஆங்கில பாடச் சித்தியுடன் ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் கணிதம் அல்லது விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மேலதிக விவரங்களை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும்.

(203-72)


### வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு மினரல் வோட்டர், பழச்சாறு, மென்பானம் போன்ற உற்பத்திப் பொருள்கள் தயாரிப்பதில் அனுபவமுள்ள மற்றும் விற்பனைப் பிரதிநிதிகள், ஆலோச கர்கள், இயந்திர இயக்குநர்கள் உடன் தேவை.

தொடர்பு: 0041 325444333
0041 789240624 (sms)
E.mail: Jaffnacity@hotmail.com

(அ/557255)


### பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 09 . 1936



மறைவு 25 . 02 . 1999


**அமரர் பாக்கியநாதர் மேரி யோசப் அன்ரனி**
(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்- தீவகம்)

காற்றோடு கலந்து எம் மூச்சாக நிற்கும் உயிரே!
கண்ணை இமை காப்பது போல் எம்மை வழி
நடத்தும் ஒளியே!
உன் அன்புக்காக ஏங்கும் நாம் உமை அஞ்சலித்து
உம்து ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

35/9, விபுலானந்தர் வீதி,
அரியாலை. (82995)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் முருகேசு சங்கரப்பிள்ளை**
(முருகன் ஸ்ரோர்ஸ், மாவத்தகம & சுன்னாகம், முன்னாள் உரிமையாளர்)
தோற்றம்: 16.07.1931 மறைவு: 26.01.2009

பாசத்தின் ஒளி விளக்கே!
கட்டிய மாதையும் பெற்றெடுத்த செல்வங்களையும்
தவிக்க விட்டு நெடுந்தூரம் சென்றது ஏனோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

மங்களம்,
பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (83001)


### மேற்பார்வையாளர் தேவை

வியாபார ஸ்தாபனம் ஒன்றை மேற்பார்வை செய்ய (கடையில் மனேஜராக வேலை செய்த) அனுபவம் வாய்ந்த நாணயமான ஆண் தேவை.


குறிப்பு:
- 50 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- நற்சான்றிதழ்ப் பத்திரம்
- நல்லூர் கந்தசுவாமி கோயில் சுற்றாடலில் 1 கி.மீ. இற்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

உடன் தொடர்பு கொள்ளவும்: 0778607756

(829960)


# மரண அறிவித்தல்

## செல்லப்பு யோசேப் மனுவேல்பிள்ளை



திருமுழுக்கினால் நித்திய வாழ் விற்கு உரிமைபெற்ற செல்லப்பு யோசேப் மனுவேல்பிள்ளை கடந்த 20.02.2009 அன்று இறை சன்னிதானம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் யோசேப்- செல்லப்பு முத் தம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்லப்பு செல்வராசா, மேரி பிலோ மினா, றீற்றா மேரி, ஞானசீலி, பிரான் சிஸ்கா புஸ்பராணி ஆகியோரின் பாச மிகு சகோதரனும் ஞானப்பிரகாசம் அல்பேட், காலஞ்சென்ற செல்லத் தம்பு வேதா, வேதநாயகம் யேசுதாஸன், குருசுமுத்து அன்ரனி ஆகியோரின் மைத்துனரும் மனோகரன், விக்டர், நவமலர், அன்ரன், ஜெயமலர், வின்சன்ற், அனற்றா, லசி ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்ற அனற்றா ரஜனி, வில்பிரட் நோபேட் மற்றும் அன்று ஜோர்ச், சில்வியா சகாயமலர், வின்சன் பயஸ், அருட்தந்தை யோசப் அருள்ராஜா(CMF), எட்வேட் விஜயரட்ணம், லிடியா சாந்தினி, ஆனந்தராஜன், பாஸ்கர தேவி, குவேந்திரராஜன், குமார், வில்சன் வசீகரன், செரின் சாந்தி, கிறிஸ் ரின் அனுஷா, கிருசாந்தன், நிர்மலகாந்த் ஆகியோரின் அன்பு மாமனுமா வார்.

விண்ணகம் எய்திய அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று 25.02.2009 முற்பகல் 10.30 மணிக்கு அச்சுவேலி தூய சூசை மாமுனிவர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து நல்லடக்கச் சடங்குகள் நிறைவேற்றப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

சங்கானை வீதி,
அச்சுவேலி.

## ஒரு பேரனின் உள்ளத்திலிருந்து.....

மலர்போல் பூத்த செல்லப்பு மனுவேல்பிள்ளை
உன்னை மடிதனில் மகிழ்ச்சியோடு ஏந்திய
தாய் தந்தையரை வேக வேகமாய் சந்திக்கச் சென்றதேனோ?
இடைவிடா இன்னல்களில் உன் சொந்தங்கள் உடனிருக்க
இயலாது என்றெண்ணி சொல்லாமல் ஏன் சென்றாய்?
வருத்தமது நாம் பார்க்க வருந்தியது நீ என
அறிந்தவன் வந்துனை பார்க்குமுன் ஏன் சென்றாய்?
தங்கையவள் உன் அருகில் தினம் இருக்க
தாங்காத துயரத்தில் தள்ளி விட்டு ஏன் சென்றாய்?
நாள் முழுதும் உன்னைப் பார்த்த எம்மவர்
உனதடியில் நாடிவரச் சொல்லாமல்
சில நொடியில் ஏன் சென்றாய்?
வருத்தமது தாங்காமல் வந்தவரை நீ விரட்டியும்
வண்டியில் ஏற்றியதை ஏன் மறந்தாய்?
உன் துன்பம் தான் பகிர தினம் இங்கு வருபவரை
உன் அருகில் வருமுன் ஏன் சென்றாய்?
கதவருகே நாம் தூங்க உன் துயர குரல் கேட்டு
கண் சிமிட்டிடும் நேரத்தில் வருவதை ஏன் மறந்தாய்?
ஆலயம் தினம் சென்று ஆயிரம் வரம் வேண்டி
அன்பதை எம்மவர்க்கு பொழிந்ததை ஏன் மறந்தாய்?
உமது ஆத்மா சாந்தியடைய உள்ளமதை திறந்து
நாம் இறையைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆக்கம்:
அ.ஜெராட் நிசாந்தன்.

சங்கானை வீதி,
அச்சுவேலி. (829998)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## மதுரமலை சுரேந்தர்

பெறுபேறு: 3ஏ (தேவரையாளி இந்துக் கல்லூரி)

நான் எனது ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தரம்வரை யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் கல்வி கற்றேன். ஜி. சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் முதற்தடவையில் எனது குடும்பச் சூழ்நிலை காரணமாகச் சித்தியடைய முடியவில்லை. எனது விடாமுயற்சியினால் இரண்டாம்முறை சித்தியடைய முடிந்தது.

நான் உயர்தரக் கல்விக்காகக் கலைப் பிரிவினைத் தெரிவுசெய்து, அதில் தமிழ், அளவையி யல், நாடகமும் அரங்கியலும் ஆகிய மூன்று பாடங்களையும் தெரிவுசெய்து கற்றேன். ஜி. சீ.ஈ. உயர்தரத்தில் 3ஏ பெறுபேற்றினைப் பெற்றுக்கொண்டமை எனக்கு மகிழ்ச்சிதரும் செய்தியாக இருந்தது. இவ்வாறான நிலைமைக்கு வருவதற்கு எனது முயற்சியே காரணம். ஏனெனில் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் இரண்டாம் முறை சித்தி எய்தியதால், இரண்டாம் முறை கற்கும்போது ஏற்படும் சிரமத்தை நன்கு அறிந்திருந்தேன். அதுவே என்னை முதற்தரத்தில் சித்தி எய்த வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியது. மற்றும் எனது தந்தையின் தொழில் கஷ்டமும், தாயின் ஊக்கமும், எனக்குக் கீழுள்ள சகோதரர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்ற எண்ணமுமே காரணம் ஆகும்.

மேலும் என்னை வழிப்படுத்தி, கல்வியூட்டிய அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பர்கள் போன்றவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## பிரதீபா செல்வச்சந்திரன்

பெறுபேறு: 2ஏபி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)



நான் 1, 2ஆம் தரங்களில் மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கல்வி பயின்று பின்னர் தரம் 3 தொடக்கம் உயர்தரம் வரை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றேன். எனது தந்தையார் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மண் பரிசோதகராகக் கடமையாற்றுகிறார். நான் பெற்றோர், ஆசிரியரின் ஆதரவுடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் சித்தியடைந்து தொடர்ந்தும் சாதாரண தரத்திலும் சிறப்பான சித்தியைப் பெற்றேன். சாதாரணதரத்தில் வர்த்தகப் பாடத்தில் அதிக ஈடுபாடு கொண்டுள்ளதன் காரணமாக உயர்தரத்தில் வர்த்தகத் துறையைச் தெரிவு செய்தேன். உயர்தரத்தில் முழு அர்ப்பணிப்புடனும், ஈடுபாட்டுடனும் கற்பித்த ஆசிரியர்களின் அக்கறையுடனும், ஊக்கத்துடனும், வழிகாட்டுதல்களுடனும் சிறந்த பெறுபேற்றை நான் அடைந்தேன். குடும்பத்தினர் கற்பதற்கான சூழலையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தித் தந்ததற்கு இணங்கவும், பொருளியல், கணக்கியல் ஆகிய பாடங்களில் 'ஏ' தரச் சித்தியுடனும், வணிகக் கல்வியில் 'பி' சித்தியும் பெற்றேன்.

எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைப்பதற்கு உதவிய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாட ஆசிரியர்கள், சகோதரர்கள், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

## ஸ்ரீரங்கநாதன் கமலதர்ஷன்

பெறுபேறு: 2ஏபி (உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி)



நான் தரம் 1முதல் தரம் 13 வரை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்விகற்றேன். கலைத் துறையில் நான் விரும்பியெடுத்த பாடங்கள் தமிழ், அளவையியல் நாடகமும் அரங்கியலும் ஆகும். நான் மிக வும் விருப்பத்துடனும் ஆர்வத்தோடும் உயர் தர வகுப்பில் கற்றதனால் என்னால் 2ஏ,பி பெறுபேறுகளைப் பெறமுடிந்தது.

எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் பிரபானந்தன், முரளிதரன், கனகேஸ்வரன், ஜோதீஸ்வரன் ஆகியோரும், தனியார் கல்வி நிறுவனத்திற்கும் தமிழ் கற்பித்த நடராஜா அவர்களுமே எனது ஆக்கத்துக்கும், ஊக் கத்துக்கும் காரணமாகும். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லையாயினும் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு பெறுவதற்கும் பெற்றோரின் ஊக்குவிப்பும், சகோதரியின் முன்மாதிரியான வழிகாட்டலும் காரண மாக அமைந்தது.

## இராமலிங்கம் முகுந்தன்

பெறுபேறு: ஏபிசி (வல்வை சிதம்பரக் கல்லூரி)



நான் என்னுடைய ஆரம்பக்கல்வியை வல்வை அ.மி.த.க. பாடசாலையிலும் உயர் கல்வியை யாழ்.சிதம்பரக் கல்லூரியிலும் கற்றேன்.

உயர்தரத்தில் கணக்கீடு, வர்த்தகம், பொருளியல் ஆகிய மூன்று பாடங்களைத் தெரிவுசெய்து இருந்தேன். என்னுடைய அப்பா சாதாரண ஒரு கடற்றொழிலாளி.

என்னுடைய கல்விக்குப் பெரிதும் உதவி புரிந்தவர்கள் என்னுடைய அப்பா, அம்மா மற்றும் எனக்குக் கல்வி புகட்டிய ஆசான்கள், நண்பர்கள் ஆகியோர்தான்.

நான் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சராசரிச் சித்தியைப் பெற்றேன். எனது விடாமுயற்சியால் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு கிடைத்தது.

என்னுடைய கல்வி வளர்ச்சிக்கு எங்கள் அதி பர் மகேந்திரன் அவர்களும், ஆசி ரியர்கள் சாந்தகுமார், உதயரூபன், சர்மா, செல்வரத்தினம் ஆகியோரும் பெரிதும் உதவி புரிந்தார்கள். அனைவருக்கும் என் நன்றிகள்.



## சிவரஞ்சினி செல்வபாபதிப்பிள்ளை

பெறுபேறு: ஏபிசி (வல்வை சிதம்பரக் கல்லூரி)

நான் எனது ஆரம்பக் கல்வியை யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் கற்றேன். அங்கு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன்.

பின்னர் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 5ஏ3பி2சி எடுத்துச் சித்தியடைந்தேன். பின்னர் எனது உயர்தரக் கல்வியைக் கற்க யாழ்.சிதம்பரக் கல்லூரியை நாடினேன். அங்கு நான் வர்த்தகப் பிரிவில் கணக்கீடு, பொருளியல், வணிகம் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்தேன். மூன்று பாட ஆசிரியர்களும் மிகவும் சிரத்தையோடு கல்வியைக் கற்பித்தனர். பரீட்சைகளும் வைத்து எம்மை ஊக்கப்படுத்தினர்.

நான் எனது கல்வியை மேம்படுத்தத் தனியார் கல்வி நிலையத்தில் படித்தேன். அங்கு பொருளியல் கற்பித்த ஆசிரியர் க. உதயசீலன் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டார். அவர் மட்டுமல்ல பாடசாலையின் ஆசிரியர் திருமதி வைத்தியநாதசர்மா அவர்களும் நான் பொருளியலில் 'ஏ' எடுப்பதற்குக் காரணமானவர்களாவர்.

கணக்கீடும் நல்ல பயிற்சி இருந்தது. எமது ஆசிரியர் இ.சாந்தகுமார் அவர்களின் ஊக்கப்படுத்தலும் எனக்குப் பெரிதும் உதவியது. எனினும் வணிகக் கல்விப் பாடத்தில் 'சி' எடுத்தமை மிகவும் வேதனையைத் தருகிறது.

நான் எதிர்காலத்தில் ஒரு கணக்காளராக வர விரும்புகிறேன். இறுதியாக எனக்குக் கற்பித்த அனைத்து ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வைஸ்ணவி சிவச்செல்வம்

பெறுபேறு: 2ஏபி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)



நான் தரம் 1முதல் உயர்தரம் வரை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன். சிறுவயதிலேயே தந்தையை இழந்த நான் எனது அம்மம்மா, சித்தியுடைய அரவணைப்புடனும், அவர்களின் தொடர்ச்சியான ஊக்கத்துடனும் எனது கல்வியினைத் தொடர்ந்து பயின்றேன். எனது விடாமுயற்சியினாலும் தன்னம்பிக்கையினாலும் நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிலும் சித்தியடைந்து தொடர்ந்து ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் சிறந்த பெறுபேறு பெற்றுச் சித்தியடைந்தேன். தொடர்ந்து முழு நம்பிக்கையோடும், இறைபக்தியோடும், பாதுகாவலரின் வழிகாட்டலுடனும் உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவைத் தெரிவுசெய்து அதில் முழு ஈடுபாட்டுடனும் எனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்களின் இடையறாத வழிகாட்டலுடனும் உறவினர்களின் நல்லாதரவுடனும் கல்வி பயின்று கணக்கியலில் 'ஏ' தரத்தையும், பொருளியலில் 'ஏ' தரத்தையும், வணிகக்கல்வியில் 'பி' தரத்தையும் பெற்றதோடு பல்கலைக்கழக அனுமதியையும் பெற்றுக்கொண்டேன். இத்தகைய ஒரு பல்கலைக்கழக மாணவியாக நான் தெரிவுசெய்யப்பட எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



## பாலசுப்பிரமணியம் நிரோஜன்

பெறுபேறு: 2ஏபி (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)

நான் தரம் 1 முதல் உயர்தரம் வரையும் யா/விக்கினேஸ்வராக் கல்லூரியிலே கல்வி பயின்றேன். எனது தந்தையார் விவசாயி. எனது தந்தையாரும் தாயாரும் எனது கல்வியிலே மிகுந்த அக்கறை காட்டினர். இதன் பயனாக நான் சாதாரண தரத்திலே 5ஏ பெற்றுக் கலைத்துறையைத் தெரிவு செய்தேன். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனது கல்வியை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகவும் உறுதுணையாக இருந்து ஆலோசனைகள் கூறி வழிகாட்டினார்கள். இவற்றைவிட என்னை இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்றச் செய்து என்னை மேன்மேலும் வளர்த்தெடுத்தார்கள். இவற்றுக்கு மேலாக எனது நண்பர்கள் எனக்கு இடர்பாடுகள் வரும்போது தோள் தந்து என்னைத் தாங்கினார்கள். அவர்களில் ஒரு நண்பன் என்னை 8 மாதம் தனது வீட்டில் வைத்து சொந்த உறவு போல வளர்த்துக் கல்வியில் உயர எனக்கு உதவி புரிந்தார். மேலும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் என்னுடன் நண்பர்களைப் போல் பழகி எனது கல்விக்குப் பங்களிப்புச் செய்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனுடைய கிருபையும் எனக்குத் துணையாக இருந்தது. எனவே எனது கல்வியிலே நான் சித்தியடைய உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சந்திப்பும், படங்களும்: ஔண்யன், கணேசமூர்த்தி. 23

## து.ஜனரஞ்சனி

பெறுபேறு: 2ஏபி (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)



நான் தரம் 1-11 வரை யா/கம்பர்மலை வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். அங்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தேன். பின்பு என்னுடைய உயர்தரக்கல்வியை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கற்றேன். இப்பாடசாலையில் நான் தமிழ், அளவையியல், சங்கீதம் என்ற மூன்று பாடங்களையும் தெரிவுசெய்து கலைப்பிரிவில் எனது கல்வியைப் பெற்றுக்கொண்டேன்.

இம்மூன்று பாட ஆசிரியர்களும் எனக்கு மிகவும் நல்லமுறையில் என்னுடைய சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில் சிறப்பாகக் கல்வியைக் கற்பித்தார்கள். இதன்மூலமாக நான் என்னுடைய உயர்தரக்கல்வியில் 2ஏபி என்ற பெறுபேற்றையும் பெற்றுக்கொண்டேன்.

அதேவேளை என்னுடைய வீட்டில் என்னைப் படிக்க வைப்பதற்குப் பெரிதும் பங்காற்றியவர்கள் எனது சகோதரிகள். அவர்களின் அக்கறையினாலும் கவனத்தினாலுமே நான் இந்தப் பெறுபேற்றைப் பெற்றுக்கொண்டேன்.

என்னுடைய கல்வியை மேன்மையடையச் செய்தவர்கள் எனது ஆசிரியர்களும், எனது பாடசாலையுமே ஆகும். இந்தப் பாடசாலையில் என்னையும் ஒரு மாணவியாக்கி அனுமதி வழங்கிய எனது அதிபருக்கும் என்னுடைய அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



## கனிஷ்டா சிவக்குமார்

பெறுபேறு: 2ஏசி (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)

எமது நாட்டுச் சூழ்நிலை காரணமாக எனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியை மு/மல்லாவி மகா வித்தியாலயம்; கொழும்பு முகத்துவாரம் இந்துக் கல்லூரி, யா/விக்னேஸ்வராக் கல்லூரி போன்றவற்றில் கற்றேன். எனது உயர்தரத்தை விக்னேஸ்வராக் கல்லூரியிலே கற்றேன்.

நான் சாதாரண தரப் பரீட்சையில் உயர் பெறுபேற்றை எதிர்பார்த்தேன். ஆனால் பரீட்சை நேரத்தில் என் உடல் நிலை பாதிக்கப்பட்டமையால் எதிர்பார்த்த பெறுபேற்றைப் பெறமுடியவில்லை. இதனால் நான் மிகவும் வேதனைப்பட்டேன். எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காமையால் படிப்பில் நம்பிக்கையும் ஆர்வமும் இல்லாமல் போய்விட்டது. அத்து டன் உயர்தரம் கற்கும்போது அடிக்கடி சுகயீனப்பட்டு அதனால் என்னால் படிக்கமுடியாதிருந்தது.

நான் வர்த்தகத் துறையையே தெரிவுசெய்தேன். நான் பல்கலைக்கழகம் செல்வேன் என எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அப்பா, அம்மா, மாமாமார் எல்லோரும் எதிர்பார்த்தனர். எனக்குச் சுகயீனம் ஏற்படாமல் இருந்திருந்தால் இதனைவிட உயர்ந்த பெறுபேற்றைப் பெற்றிருப்பேன்.

நான் இந்தப் பெறுபேற்றைப் பெறுவதற்கு இறைவனின் அருளும், பாடசாலை அதிபர் மற்றும் எனக்குக் கற்பித்த ஆசிரியர்களும், ஏனைய ஆசிரியர்களும் மற்றும் தனியார் கல்வி நிலையத்தில் கற்பித்த ஆசிரியர்கள் ஆகிய எல்லோரது வழிகாட்டலும் ஊக்குவிப்புமே காரணமாகும். மற்றும் சாதாரண தரத்தின்போது எனக்குக் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் ஆகியோரும் எனக்கு வழிகாட்டியாக இருந்தனர். இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## சுபோசினி பத்மநாதன்

பெறுபேறு: 2ஏசி (கோக்குவில் இந்துக் கல்லூரி)



நான் கலைத்துறையில் தமிழ், புவியியல், சங்கீதம் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்து கற்றேன். இப்பாடங்களை மனனம் செய்து கற்காமல் கிரகித்தல் மூலமும், அதிகமான பயிற்சிகளையும் வினாக்களையும் செய்ததுடன் என்னுடைய சுயதேடலே நான் சிறப்புப் பெறுபேற்றைப் பெறவழி சமைத்தது.

நான் சிறப்புப் பெறுபேற்றைப் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்வேன் என்ற நம்பிக்கை என்னுடைய மனதில் எப்போதுமே இருந்தது. எச்செயலுக்கும் இறைவனின் ஆசீர்வாதமும் அனுக்கிரகமும் இருத்தல்வேண்டும். சிறந்த பெறுபேற்றைப் பெற எனக்கு அனுக்கிரகம் செய்த [illegible]க்கும் என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனக்கு இசைத்துறையில் இருந்த அதீத ஆர்வமே நான் சங்கீதத்தை ஒரு பாடமாகப் பயில்வதற்குக் காரணமாக அமைந்தது. தவிர ஓவியத்துறையிலும் ஈடுபாடு உண்டு. எனினும் விளையாட்டுத்துறையில் பெரியளவில் ஆர்வம் இல்லாத போதும் சதுரங்கத்தின் மீது ஆர்வமுண்டு.

என்னுடைய கல்வி மூலம் எனது சமூகத்துக்குச் சேவையாற்ற விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத் திருத்தச் சட்டமூலத்தை எதிர்த்து எம்.பிக்களுக்குக் கடிதம்

## தொழிற்சங்கங்கள் தீர்மானம்

கொழும்பு, பெப். 25

அடுத்த மாதம் மூன்றாம் திகதி நாடாளுமன்றிற்குக் கொண்டுவரப்படவுள்ள மின்சாரத் திருத்தச்சட்டமூலத்திற்கு எதிராக வாக்களிக்குமாறு கோரி இன்று மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் ஆளும் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியாகக் கடிதங்களை அனுப்பத் தீர்மானித்துள்ளன.

இச்சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று முதல் அடுத்த மாதம் மூன்றாம் திகதிவரை பல்வேறுபட்ட போராட்டங்களிலும் தொழிற்சங்கங்கள் ஈடுபடுகின்றன.

அதன்படி இச்சட்டமூலத்தை ரத்துச் செய்யக்கோரி ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக இன்று நண்பகல் தொழிற்சங்கங்கள் பொதுமக்களிடமிருந்து கையெழுத்துகளைத் திரட்டுகின்றன.

27 ஆம் திகதி நாட்டில் உள்ள சகல மின்சார சபை ஊழியர்களும் சட்டமூலத்தை ரத்துச் செய்யக்கோரி ஜனாதிபதிக்கு தந்தி அனுப்புவர்.

அடுத்த மாதம் இரண்டாம் திகதி கொழும்பில் அமைந்துள்ள மின்சாரசபைத் தலைமையகத்திற்கு முன்பாக கறுப்புக் கொடிகள் பறக்க விடப்படும்.

சட்டமூலம் நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்படும் மூன்றாம் திகதி மின்சாரசபை தலைமையகத்திற்கு முன்பாக காலை 9.00 மணிக்கு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படும்.

நாட்டின் பல இடங்களில் உள்ள மின்சாரசபை ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வர் என்று இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் உதயனுக்குத் தெரிவித்தார். (சி)

# தோட்டப் போட்டியில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் மாகாண மட்டத்துக்கு தெரிவு செய்யப்படவுள்ளது

நவாலி, பெப்.25

யாழ்.மாவட்டத்தில் அலுவலகங்களுக்கிடையேயான தோட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படவுள்ளது.

இதற்கென மாகாண விவசாயப் பணிப்பாளரும் ஏனைய உயர் மட்ட அதிகாரிகளும் திருகோணமலையிலிருந்து நேரடியாக இவ்வலுவலகத்துக்கு வந்து இங்கு செய்கை பண்ணப்படும் தோட்டங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இங்கு தானிய, விதை கிழங்கு, தேனீ வளர்ப்பு, மேலைநாட்டு மரக்கறி, பழவகைகள், சாடிப் பயிர்ச் செய்கை, கலப்பு முறை பயிர்ச் செய்கை, இயற்கைமுறைப் பீட கட்டுப்பாடு, செயற்கைப் பசளை, அழகுத் தாவரங்கள், விஞ்ஞான முறைப் பயிர்ச் செய்கை, இயற்கைப் பசளை, மூலிகைத் தோட்டம் என்பனவும் செய்கை பண்ணப்பட்டு வருவதாகப் பிரதேச செயலர் ரூபிணி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். (1-100)

# மனை முகாமைத்துவ கற்கைநெறி

யாழ்ப்பாணம்,பெப்.25

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் மனைமுகாமைத்துவ கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கை நெறியை மேற்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் முதலாம் திகதி கல்லூரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து வழங்குமாறு கல்லூரி அதிபர் திருமதி வி.பேரின்பநாதன் கேட்டுள்ளார். (203)

# கோடா வைத்திருந்தவருக்கு 50 ஆயிரம் அபராதம்

மந்திகை,பெப்.25

கசிப்பு உற்பத்திக்கான கோடாவை வைத்திருந்த பெண் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதத்தைச் செலுத்தத் தவறின் 12 மாத கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அல்வாயைச் சேர்ந்த மாணிக்கம் தங்கா என்பவர் கசிப்பு உற்பத்திக்கான கோடாவை வைத்திருந்தாரெனக் குற்றஞ் சாட்டி பருத்தித்துறைப் பொலிசார் அவரைப் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிவான் அவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்(203-218)

# கிணறுகள் புனரமைப்பு

வண்ணை,பெப்.25

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பண்டத்தரிப்பு, நல்லூர் ஆகிய இடங்களிலுள்ள பொதுக் கிணறுகளைப் புனரமைத்து வருகின்றது.

பண்டத்தரிப்பு, பற்றிமா வீதி மற்றும் பிரான்பற்று முள்ளியடி வைரவர் கோயில், யசிந்தா பாடசாலை முன்பாக உள்ள பொதுக் கிணறுகளையும் -

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கு முன்பாக அமைந்திருக்கும் பொதுக் கிணற்றையும் புனரமைப்புச் செய்து வருகிறது.

பல வருடகாலமாகச் சேதமடைந்து மக்கள் பாவனைக்கு உதவாமல் இருந்து வந்த மேற்படி பொதுக் கிணறுகள் புனரமைப்புச் செய்யப்படுவதால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் இதுவரை காலமும் எதிர்நோக்கி வந்த குடிதண்ணீர்க் கஷ்டங்கள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-100)


## கண்ணீர் அஞ்சலி



எமது கைதடி கமநல சேவை
நிலையத்தின் லிகிதராகக்
கடமையாற்றிக் கொண்டிருந்த
திருமதி செல்வராஜா
யோகேஸ்வரி
அவர்கள் 23.02.2009 திங்கட்கிழமை
காலமானதை அறிந்து மிகவும் ஆழ்ந்த
துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

(82456) கைதடி வடக்கு விவசாயிகள் சம்மேளனம்

## கண்ணீர் அஞ்சலி



திருமதி செல்வராஜா
யோகேஸ்வரி
[லிகிதர், கைதடி கமநல சேவைகள் நிலையம்]
கைதடி கமநல சேவை உயர்விற்காய்
நெடுந்தூரம் எம்மோடு கைகோர்த்துப்
பயணித்தவரே - நீங்கள் மறைந்த செய்தி
கேட்டு மனதிற்குள் அழுகின்றோம். என்றும்
உங்கள் நினைவு எம்மோடு கலந்திருக்கும்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கமநல அபிவிருத்தித் திணைக்கள சமூகம்,
யாழ்.மாவட்டம்.
(83004)

## கண்ணீர் அஞ்சலி



கைதடி கமநல சேவைகள் நிலையத்தின்
குழு லிகிதராக நீண்டகாலம்
கடமையாற்றி 23.02.2009 பின்னிரவு
இறைபதமடைந்து விட்ட
திருமதி செல்வராஜா
யோகேஸ்வரி
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த
வேதனைப்படுவதுடன் அன்னாரது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்தித்து அவரது இழப்பால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது
இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

கமநல சேவைகள் நிலையம்,
கைதடி.
(83002)

உ
சிவமயம்

## ருதுசோபன மங்கள நன்னீராட்டு விழா அழைப்பு



ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சர்வதாரி வருஷம் மாசி
மாதம் 13 ஆம் நாள் இன்று (25.02.2009) புதன்கிழமை
சதய நட்சத்திரமும் பிரதமை திதியும் சித்தயோகமும் கூடிய
சுபநன்னாளில் முற்பகல் 9.45 மணிமுதல் 11 மணிவரையுள்ள
மேஷ லக்கின சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எ.சோமசுந்தர ஐயர் (ஆசிரியர், பண்டிதர்) | தி.கார்த்திகேசக் குருக்கள் |
| சோ.இலட்சுமி நாராயணக் குருக்கள் | பௌத்திரி |
| புத்திரி | தியாகராசக் குருக்கள் |

எமது ஏக புத்திரியுமாகிய
திருவளர் செல்வி இ.ஷிந்துஜா
அவர்களுக்கு

எமது இல்லத்தில் ருதுசோபன உதக சாந்தி நடத்த
எல்லாம் வல்ல விநாயகர், அம்மன், வைரவர் திருவருள்
துணையுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்
அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து
எங்கள் மங்களச் செல்வியை ஆசீர்வதித்து வாழ்த்தி
எங்களை மகிழ்விக்கும் வண்ணம் அன்புடன்
அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

தங்கள் நல்வரவை நாடும்:
சோ.இலட்சுமிநாராயணக் குருக்கள்
சிவாஜினி தம்பதிகள்.
தொ.பே: 0775298669

சிவன்கோயிலடி,
சித்தன்கேணி.

வரவேற்பாளர்கள்:
இ.சோமசுந்தர சர்மா, இ.ஷிந்துயசர்மா, சோ.சுப்பிரமணியக்
குருக்கள் தம்பதிகள், சோ.பாலகிருஷ்ணக் குருக்கள்
தம்பதிகள், தி.கார்த்திகேச சர்மா, ச.வைத்தீஸ்வரக்
குருக்கள் தம்பதிகள்.

## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250
Branch : #07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்
மாபெரும் கட்டணக்கழிவுடன் ஆரம்பமாகின்றது

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் - 2008 80%OFF

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office — 3 Months — 1500/= | Diploma in Desktop Publishing — 4 Months — ~~10000~~ 2000/= | Diploma in Web Page Designing — 3 Months — ~~10750~~ 2150/= |
| Diploma in Graphic Designing — 4 Months — ~~10750~~ 2150/= | Diploma in Hardware Engineering — 3 Months — ~~10000~~ 2000/= | Diploma in Auto CAD — 3 Months — ~~10000~~ 2000/= |
| Diploma in Accounting Package — 3 Months — ~~10750~~ 2150/= | Diploma in Computer Science — 4 Months — ~~10750~~ 2150/= | Honors Diploma in Computer Science — 3 Months — ~~13000~~ 2600/= |

**50% Off Advance Courses**

| | |
|---|---|
| Dip. in. Multimedia | 2750 |
| Dip. in. Video Editing | 3250 |

Computer Express

MARCH 15 ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

| யாழ்நகரில் ஆரம்பம் | நெல்லியடியில் ஆரம்பம் |
|---|---|
| Batch I: 27/02/2009 -09AM | Batch I: 26/02/2009 -09AM |
| Batch II: 28/02/2009 -09AM | Batch II: 28/02/2009 -10AM |
| Batch III: 01/03/2009 -09AM | Batch III: 01/03/2009 -10AM |
| Batch IV: 04/03/2009 -09AM | Batch IV: 03/03/2009 -09AM |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒஸ்கார் நாயகன் ஏ.ஆர்.ரஹ்மானின் வாழ்க்கைப் பயணம் மற்றிய பார்வை!

### தமிழ்

ரோஜா
ஜெண்டில்மேன்
கிழக்குச்சீமையிலே
புதியமுகம்
திருடா திருடா
உழவன்
டூயட்
காதலன்
கருத்தம்மா
மே மாதம்
புதிய மன்னர்கள்
வண்டிச்சோலை -சின்னராசு
பவித்ரா
பம்பாய்
இந்திரா
முத்து
ரங்கிலா
இந்தியன்
காதல் தேசம்
லவ் பேர்ட்ஸ்
மிஸ்ரர் ரோமியோ
இருவர்
மின்சாரக்கனவு
ரட்சகன்
ஜீன்ஸ்
உயிரே
முதல்வன்
தாஜ் மஹால்
சங்கமம்
காதலர்தினம்
ஜோடி
தாளம்
என் சுவாசக்காற்றே
படையப்பா
அலைபாயுதே
கண்டுகொண்டேன் - கண்டுகொண்டேன்
ரிதம்
தெனாலி
ஸ்டார்
பார்த்தாலே பரவசம்
அல்லி அர்ஜூனா
கன்னத்தில் முத்தமிட்டால்
பாபா
காதல் வைரஸ்
உதயா
பரசுராம்
பாய்ஸ்
எனக்கு 20 உனக்கு 18
கண்களால் கைது செய்
ஆய்த எழுத்து
நியூ
தேசம்
அ ஆ
சில்லுனு ஒரு காதல்
வரலாறு
குரு
சிவாஜி
அழகிய தமிழ் மகன்
சக்கரகட்டி

### ஹிந்தி

ரோஜா
தி ஜெண்டில்மேன்
ச்சோர் ச்சோர்
ஹம்ஸே ஹே முக்காப்லா
பம்பாய்
ரங்கிலா ஹிந்துஸ்தானி
துனியா தில்வாலோன் கீ
ஃபயர்
சப்னே
தவுட்
ஜீன்ஸ்
தில்ஸே
தோலி சஜா கே ரக்ஹனா
கபி நா கபி
நாயக்
தாள்
1947 எர்த்
தஷக்
புக்கார்
சாத்தியா
தில் ஹே தில் மே
சுபைதா
ஒன் 2 கா 4
லவ் யூ ஹமேஷா
லகான்
தி லெஜண்ட் ஆஃப் பகத் சிங்
சாத்தியா
தெஹ்ஜிப்
யுவா
ஸ்வதேஸ்
லகீர்
மீனாக்சி- எ டேல் ஆஃப் 3 சிட்டீஸ்
தில் நே ஜிஸே அப்னா கஹா
கிஸ்னா
போஸ் -தி ஃபர்காட்டன் ஹீரோ
மங்கள் பாண்டே - தி ரைஸிங்
வாட்டர்
ரங் தே பசந்தி
குரு
ப்ரோவோக்டு
ஜோதா அக்பர்
ஜானே து யா ஜானே நா
அடா எ வே ஆப் லைப்
யுவ்ராஜ்
கஜினி
டில்லி 6

### தெலுங்கு

ரோஜா
ஜெண்டில்மேன்
டொங்கா டொங்கா
சூப்பர் போலீஸ்
கேங் மாஸ்டர்
பம்பாய்
பாரதியடு
பிரேம தேசம்
மெருப்பு கலலு
ரக்ஷடு
ஜீன்ஸ்
ஹிருதயாஞ்சலி
ஒக்கே ஒக்கடு
பிரேமிகுலு ரோஜீ
சகி
ப்ரியலு பிலிச்சந்தி
ரிதம்
தெனாலி
பரவசம்
அம்ருதா
பாய்ஸ்
நீ மனசு நாக்கு தெலுசு
யுவா
நானி
குரு

### ஆங்கிலம்

வாரியர்ஸ் ஆப் ஹெவென் அண்ட் எர்த்
எலிசபெத் தி கோல்டென் ஏஜ்
ஸ்லம் டாக் மில்லியனியர்

### 1966 ஆம் ஆண்டு

ஜனவரி 6 ஆம் திகதி பிறந்த ஏ.ஆர்.ரஹ்மானின் இயற்பெயர் ஏ.எஸ்.திலீப்குமார். இவருடைய தந்தை சேகர். மலையாள படவுலகில் முன்னணி இசையமைப்பாளராக திகழ்ந்தவர். இவருடைய தாய் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர். 9 வயதாக இருந்தபோது தந்தை சேகர் மரணமடைந்தார். இதனால் குடும்பம் நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டது. வீட்டில் இருந்த இசைப்பொருள்கள் எல்லாம் விற்று வாடகை வீட்டில் வாழ்க்கை நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்நிலையில் தாயாரின் அன்பு அரவணைப்பில் வளர்ந்த ஏ.எஸ்.திலீப்குமார் இஸ்லாம் மதத்துக்கு மாறினார். தனது பெயரை ஏ.ஆர்.ரஹ்மான் என்று மாற்றிக்கொண்டார். தனது இளவயது நண்பர்களான 'டிரம்ஸ்' சிவமணி, ஜோன் அன்ரனி, ஜோஜோ, ராஜா ஆகியோருடன் இணைந்து கீபோர்ட் பிளேயராக தனது இசைப் பயணத்தைத் தொடங்கினார். ஆரம்பத்தில் மாஸ்டர் தனராஜிடம் இசைபயின்ற ஏ.ஆர்.ரஹ்மான் 11 வயதில் இசைஞானி இளையராஜாவிடம் கீபோர்ட் கலைஞராக சேர்ந்தார். பின்னர் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன், ரமேஷ் நாயுடு, ஜாகிர் உசேன், குன்னக்குடி வைத்தியநாதன், எல்.சங்கர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றினார். குறிப்பாக எல்.சங்கருடன் இணைந்து அவர் நடத்திய உலகளாவிய கச்சேரியில் பணியாற்றினார். 1992 ஆம் ஆண்டு ரஹ்மானின் இசைப் பயணத்தில் முக்கிய மைல்கல் தனியாக சொந்தமாக இசைப்பதிவு மற்றும் இசைக்கலப்பு ஸ்ரூடியோவை தொடங்கினார். ரஹ்மான் தனது வீட்டுக்குப் பின்னால் இந்த ஸ்ரூடியோவை தொடங்கினார். பஞ்சதன் றெக்கோர்டிங் என்று அதற்குப் பெயர். இன்று இந்தியாவின் அதிநவீன றெக்கோர்டிங்ஸ்ரூடியோக்களில் ஒன்றாக பஞ்சதன் விளங்குகிறது. இந்நிலையில் இயக்குநர் மணிரத்தினம் உருவில் ரஹ்மானுக்கு திடீர் திருப்பம் ஏற்பட்டது. தனது ரோஜா படத்துக்கு இசை மற்றும் பின்னணி இசை அமைத்துத் தரவேண்டும் என்று மணிரத்தினம் கேட்டார். சந்தோஷத்துடன் ஒத்துக்கொண்ட ரஹ்மான் தனது திறமைகளை ரோஜா படத்தில் காட்டினார். முதல் படத்திலேயே இந்தியா முழுவதையும் தன் பக்கம் ஈர்த்த பெருமைக்குரியவர் ரஹ்மான். கூடவே தேசிய விருதையும் பெற்று, இந்திய இசைப் பிரியர்கள் மத்தியில் ஒரு புதிய வடிவத்தை அறிமுகப்படுத்தினார். அதன் பிறகு ரஹ்மானின் இசைப் பயணம் புயல் வேகத்தில் இருந்தது. 1997 ஆம் ஆண்டு இசையமைத்த மின்சாரக் கனவு, 2002 ஆம் ஆண்டு இசையமைத்த கன்னத்தில் முத்தமிட்டால் ஆகிய படங்களுக்காக தேசிய விருதுகளைப் பெற்றார். அதிக அளவிலான தேசிய விருதுகளைப் பெற்ற ஒரே இசையமைப்பாளர் இன்றைய தேதிக்கு ரஹ்மான் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. ரோஜாவுக்குப் பிறகு தமிழில் மட்டுமல்லாமல் ஹிந்தியிலும் தனது முத்திரையைப் பதித்தார் ரஹ்மான். தமிழைப் போலவே ஹிந்தியிலும் முன்னணி இசையமைப்பாளராக பரிணமித்தார். இந்தியாவின் முன்னணி பாடலாசிரியர்களான வாலி, குல்ஸார், மேஹபூப், வைரமுத்து ஆகியோருடன் இணைந்து அதிக பாடல்களைக் கொடுத்த பெருமைக்குரியவர் ரஹ்மான். அதேபோல மணிரத்தினம், ஷங்கர் என முன்னணி இயக்குநர்களுடன் பணியாற்றியவரும் ரஹ்மான்தான். திரை இசை தவிர்த்து தனியான இசை வெளியீடுகள் பலவற்றையும் படைத்துள்ளார் ரஹ்மான். இவரது இசையில் உருவான 'வந்தே மாதரம்' இன்றைய திகதிக்கு இந்தியாவில் அதிகம் கேட்கப்பட்ட இசை வடிவமாக உள்ளது. 1997 ஆம் ஆண்டு இந்தியாவின் சுதந்திர தின பொன்விழாவையொட்டி வந்தே மாதரத்தை வெளியிட்டார் ரஹ்மான். 1999 ஆம் ஆண்டு ஷோபனா, பிரபுதேவா ஆகியோருடன் இணைந்து மியூனிச் நகரில் மைக்கேல் ஜாக்சனுடன் இணைந்து கச்சேரி செய்தார் ரஹ்மான். கடந்த 6 ஆண்டுகளில்சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, மலேசியா, டுபாய், இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா மற்றும் இந்தியாவில் 3 வெற்றிகரமான உலக நிகழ்ச்சிகளை நடத்தினார் ரஹ்மான். கர்நாடக இசை, மேற்கத்திய கிளாசிகல், இந்துஸ்தானி மற்றும் கவாலி இசையில் திறமை மிக்கவரான ரஹ்மானுக்கு புதிய வடிவில் புதிய இசையைக் கொடுப்பது அவருக்கு கைவந்த கலையாகும். ஏ.ஆர்.ரஹ்மானின் இசைப்பயணம் போலவே அவரது குடும்பப் பயணமும் ரம்மியமானது. அவரது மனைவி சாய்ரா பானு. இவர்களுக்கு கதீஜா, ரஹீமா, அமன் என மூன்று மகள்கள். தமிழில் ரஹ்மானுக்கு முதல் படம் ரோஜா. இந்தியிலும் தெலுங்கிலும் தயாரிக்கப்பட்டு வெற்றிகரமாக ஓடியது. இந்தியில் ரஹ்மானின் நேரடி முதல் படம் ரங்கிலா. மலையாளத்தில் முதல் படம் யோதா. தெலுங்கில் முதல் படம் சூப்பர் போலீஸ். ஆங்கிலத்தில் முதல் படம் வாரியர்ஸ் ஆப்ஹெவன். 1992 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை என் வாழ்நாளில் மறக்கமுடியாது என்பார் ரஹ்மான். காரணம் ரோஜா படம் வெளியாகி தென்னிந்தியா திரும்பி பார்த்தநாள் அதுதான். முதல் படத்திலேயே தேசிய விருது பெற்றார் ரஹ்மான். இந்திய இசையமைப்பாளர்களிலேயே அதிக தடவை தேசிய விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் ரஹ்மான் தான். பத்மஸ்ரீ, பத்மபூஷணன் ராஜீவ்காந்தி விருது, தமிழக அரசின் சிறந்த இசையமைப்பாளர் விருது ,பிரபல இந்தி இசையமைப்பாளர் ஆர்.டி.பர்மன் நினைவாக வழங்கப்படும் ஆர்.டி.பர்மன் விருது. எம்.டி.வி.யின் வாழ்நாள் சாதனை விருது.18 முறைகளுக்கு மேல் பிலிம்ஃபேர் விருது என ரஹ்மானை பெருமைப்படுத்திய விருதுகளின் எண்ணிக்கை அதிகம். உலக அளவில் திரைப்படத் துறையினருக்கான உயரிய விருதாகக் கருதப்படும் ஒஸ்கார் விருதுகள் 23 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. ஸ்லம்டாக்மில்லியனர்படத்துக்காக சிறந்த இசைக்காகவும் சிறந்த பாடலுக்காகவும் ஏ.ஆர்.ரஹ்மான் இரண்டு ஆஸ்கார் விருதுகளை வென்று உலகசாதனைபடைத்துள்ளார்.

(ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்த திரைப்படங்களின் அட்டவணையும் இங்கு தரப்பட்டுள்ளது.)

ஒஸ்கார் விருதை பெறும் முதல் தமிழர் என்ற பெருமையும் பெற்றுள்ளார். அத்தோடு ஒஸ்கார் மேடையில் தனது தாரக மந்திரமாகிய 'எல்லாப்புகழும் இறைவனுக்கே' என்ற வார்த்தையை தமிழில் உச்சரித்து தமிழ் மொழிக்கு உலக அரங்கில் பெருமை சேர்த்தார். தமிழ் தந்த ஒஸ்கார் நாயகனை நாமும் வாழ்த்துவோம்.

### பின்வரும் பிற மொழித் திரைப்படங்களுக்கும் இசையமைத்துள்ளார்.

1993 யோதா (மலையாளம்)
1999 Return of the Thief of Baghdad (ஆங்கிலம்)
2003Tian di ying xiong (சீனமொழி)
1999 பிஸா- ஹிந்தி (ஒரு பாடலுக்கு மட்டும் இசையமைப்பு)



### திரைப்படம் அல்லாத இசை வெளியீடுகள்

Return of the Thief of Baghdad (2003)
தீன் இசை மாலை (1989 திலீப் குமார் என்ற பெயரில்)
செட் மீ ஃப்ரீ (1991)
வந்தே மாதரம் (1997)
ஜன கண மன (2000)
பாம்பே ட்ரீம்ஸ் (2002 இசை நாடகம்)
இக்னைட்டட் மைண்ட்ஸ் (2003 இசைத்தொகுப்பு வெளியிடப்படாத நேரடி இசை நிகழ்ச்சி)
ராகாஸ் டான்ஸ் (2004 வனேசா மே நடனத்திலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணாநிதியின் உண்ணாவிரத அறிவிப்பு ஈழப்பிரச்சினையைத் திசைதிருப்பும் முயற்சி!

## ராமதாஸ், நெடுமாறன் குற்றச்சாட்டு



சென்னை, பெப். 25

முதல்வர் கருணாநிதியின் உண்ணாவிரத அறிவிப்பு வெறும் நாடகம். ஈழத் தமிழர் பிரச்சினையிலிருந்து தமிழக மக்களின் கவனத்தைத் திசை திருப்ப அவர் முயல்கிறார் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களான டாக்டர் ராமதாஸ் மற்றும் பழ. நெடுமாறன் ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் மீதான பொலிஸாரின் தாக்குதலைக் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்த இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் அழைப்பு விடுத்திருந்தது. ஆனால் அப்போராட்டத்துக்கு அனுமதி அளிக்க பொலிஸார் மறுத்துவிட்டனர்.

இந்த நிலையில் தங்களின் அடுத்தகட்டப் போராட்டம் பற்றி சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் அறிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் தொடங்கப்பட்ட போதே இந்த இயக்கம் அரசியல் மற்றும் தேர்தல் ரீதியான பணிகளில் கவனம் செலுத்தாது எனத் தெளிவாகத் தெரிவித்தோம்.

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க வலியுறுத்தி பல தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகிறோம். இந்த இயக்கத்துக்குப் பின்னால் தமிழக மக்கள் அணிவகுப்பதைப் பொறுக்க முடியாத முதல்வர் கருணாநிதி, தி.மு.க. ஆட்சியைக் கலைக்க நாங்கள் சதி செய்கிறோம் எனக் கூறுகிறார்.

காங்கிரஸ் கட்சியின் 35 எம்.எல்.ஏக்களின் ஆதரவு நீடிக்கும் வரை தி.மு.க. அரசை யாராலும் கலைக்க முடியாது. இந்த நிலையில் நாங்கள் எவ்வாறு சதிசெய்ய முடியும் என்பதைக் கருணாநிதி விளக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் மீதான தாக்குதலால் கொதித்துப்போயுள்ள சட்டத்தரணிகள் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். அவர்களின் போராட்டத்தை ஒடுக்கவே, பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு உத்தரவிட்டவர்கள் யார் என்பதைக் கருணாநிதி மக்களுக்கு விளக்க வேண்டும்.

தங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டத்தரணிகள் கோரிக்கை வைத்துள்ளனர். அவர்களின் கோரிக்கை மீது முடிவெடுத்து, தீர்வு காண வேண்டியவர் முதல்வர் கருணாநிதிதான்.

ஆனால் அவரே உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் எனக் கூறுகிறார். இது வெறும் நாடகம். இலங்கைப் பிரச்சினையிலிருந்து தமிழக மக்களின் கவனத்தைத் திசை திருப்ப அவர் முயல்கிறார் - என்றார்.

பழ.நெடுமாறன் கூறியவை வருமாறு-

முதல்வரின் உத்தரவின்பேரில்தான் பொலிஸார் செயற்பட்டுள்ளனர். இந்த உண்மையை மறைப்பதற்காக முதல்வர் உண்ணாவிரத நாடகத்தை நடத்துகிறார். சட்டத்தரணிகள் வற்புறுத்தும் கோரிக்கை மிகமிக நியாயமானது. அதைச் செய்யாமல் பிரச்சினை தீராது.

தவறு செய்யும் அதிகாரிகளை காப்பாற்ற முயற்சிக்கிறார். சட்டத்தரணிகள் தாக்கப்பட்ட பிரச்சினையிலும் உயர் அதிகாரிகளை காப்பாற்றவும், தான் உத்தரவிட்டதை மூடிமறைக்கவும் முயற்சி செய்கிறார் - என்றார்.

# ஈழத்தமிழரைக் காப்பாற்றக் கோரி புதுடில்லியில் இன்று ஆர்ப்பாட்டம்

## சரத்குமார் அறிவிப்பு



சென்னை, பெப். 25

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படவும், ஈழத் தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்தவும் மத்திய அரசு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தி டில்லியில் இன்று ஆர்பாபட்டம் நடத்தப்படுகிறது-என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு -

ஈழத் தமிழர்கள் இலங்கை இராணுவத்தால் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்த மத்திய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும். இதை வலியுறுத்தி எனது தலைமையில் 25ஆம் திகதி (இன்று) டில்லியில் ஆர்ப்பாட்டம் நடக்கவுள்ளது.

இதில் கட்சி நிர்வாகிகள் முருகன், நாராயணன், கரு.நாகராஜன், செல்வராஜ், ரவீந்திரன் துரைசாமி, மருது அழகுராஜ், பிரைட் ஜோசப், ஜெயப்பிரகாஷ் மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், மகளிர் அணியினர் பங்கேற்கிறார்கள் - என்றுள்ளது.

# ஈழத் தமிழரைக் காக்க ஐ.நாவிடம் கோரி 2 கோடி கையெழுத்து இயக்கம் ஆரம்பம்

சென்னை, பெப்ரவரி 24

இலங்கையில் போரை நிறுத்தி, ஈழத் தமிழரைக் காப்பாற்ற ஐ.நா. சபை தலையிட வேண்டும் என வலியுறுத்தி 2 கோடி மக்களிடம் கையெழுத்து பெறும் இயக்கத்தை பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் சென்னையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கிவைத்தார்.

தமிழ் மக்கள் மீதான போரை நிறுத்த இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என ஐ.நா. சபை பொதுச் செயலாளர், அமெரிக்க ஜனாதிபதி, ரஷ்ய ஜனாதிபதி ஆகியோரை வலியுறுத்தி 2 கோடி மக்களிடம் கையெழுத்து பெற்று, அனுப்பும் இயக்கத்தை இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் தொடங்கியுள்ளது.

அதற்கான படிவங்களில் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் முதல் கையெழுத்திட்டு, அந்த இயக்கத்தைத் தொடக்கி வைத்தார். அவரைத் தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர். நல்லகண்ணு, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் உள்ளிட்டோர் கையெழுத்திட்டனர்.

இதுகுறித்து வைகோ கூறியவை வருமாறு -

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் கையெழுத்து படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தில் இடம்பெற்றுள்ள அமைப்புகள் தமிழகம் முழுவதும் 2 கோடி மக்களை சந்தித்து, கையெழுத்துப் பெறும் பணியில் தீவிரமாக ஈடுபடும். பின்னர் அனைத்துப் படிவங்களும் தொகுக்கப்பட்டு, ஐ.நா. பொதுச் செயலாளர் மற்றும் அமெரிக்க, ரஷிய நாட்டு ஜனாதிபதிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் - என்றார்.

# எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி...!



சிவராத்திரி தினமான நேற்றுமுன்தினம் தஞ்சை மாவட்டம் பாபநாசம் ராமலிங்க சுவாமி கோயிலிலுள்ள 108 லிங்கங்களுக்கு பக்தர்கள் விளக்கேற்றி வழிபடுகின்றனர். அடுத்த படம் பெங்களூர் கோவிலொன்றில் பக்தர்கள் வழிபாடு செய்யபோது......

# ஈழத் தமிழரைக் காக்கும் பொறுப்புள்ளதால் பதவி துறக்க கலைஞருக்கு விருப்பமில்லை!



சென்னை, பெப். 25

தமிழர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பிருப்பதால் பதவியைத் துறக்க விருப்பமில்லை - என்று முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

உண்ணாவிரதம் இருப்பது குறித்து என்னிடம் பலரும் கேள்விக்கணைகளை எழுப்பினர். இவ்வளவு பெரிய அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட நிலையில், உண்ணாவிரதம் இருக்கலாமா? எதற்காக இப்படிப்பட்ட அறிவிப்பு? காக்கிச் சட்டையினரும், கறுப்புச் சட்டையினரும் காது கொடுத்து உங்கள் பேச்சைக் கேட்கமாட்டார்களா? சட்டத்தரணிகள் போராட முன்வந்தமை எதற்காக? இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் கருதித்தானே என்றெல்லாம் கேள்விக்கு மேல் கேள்விகள்.

ஆனால், சிலர் இப்போது நம்முடைய தீர்மானங்களில் தீவிரம் இல்லை என்கிறார்கள்; பதவியைத் துறக்க விருப்பமில்லை என்கிறார்கள்; ஆட்சியிலே இருப்பதால் அதனைக் காப்பாற்ற முயலுகிறேன் என்றெல்லாம் பிரசாரம் செய்கிறார்கள்.

ஆமாம், இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற எனக்கு இருக்கின்ற அக்கறையைப் போல, இங்கேயிருக்கின்ற தமிழர்களையும் காப்பாற்ற வேண்டிய அக்கறையும், பொறுப்பும் எனக்கு இருக்கிறது அல்லவா?

ஆனாலும், கடந்த சட்டப் பேரவையில் இலங்கையிலே தமிழ் ஈழம் மலருமென்றால் அதற்காக ஆட்சியை இழக்கக் கூட நாங்கள் தயார் என்று அறிவித்தவன்தான் நான்.

ஆனால், அதையெல்லாம் வசதியாக மறைத்துவிட சிலர் முயலுகிறார்கள். தாங்கள் தான் இலங்கைத் தமிழர்களுக்கான பாதுகாவலர்கள் என்கிறார்கள். ஆட்சியைக் கவிழ்த்து விட முடியாதா? அப்படிப்பட்டவர்கள்தான் ஒரு சிலரைத் தூண்டி விட்டு, தமிழகத்தில் ஒரு கலவரத்தைத் தூண்டி விட முடியாதா? அதைக் கொண்டு சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று ஆட்சியைக் கவிழ்த்து விட முடியாதா - என்று பார்க்கின்றனர்.

நீதிமன்றத்திலே தகராறு - சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டன என்று செய்திகள் வரக்கூடிய அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டன. அந்தச் செய்தி கிடைத்தவுடன் நானே பொலிஸ் அதிகாரிகளை விட்டு நடந்த சம்பவத்துக்காக வருத்தம் தெரிவிக்கச் செய்தேன்.

அதற்குப் பிறகும் பிரச்சினை தீர்ந்த பாடில்லை. சட்டத்தரணிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையே கசப்புணர்வு ஏற்படுகின்ற அளவுக்கு நிலைமை போய்விட்டது.

இரு தரப்பினரும் யார்? இருவரும் தமிழர்கள்தான். அவர்கள் இடையே மோதல் உருவாகாதா? ரத்தம் வடியாதா? அதிலே இன்பம் காண முடியாதா என்று ஏங்குபவர்களுக்கு இடம் கொடுத்து வி[illegible] உண்ணாவிரத [illegible] என்றுள்ளது.

## அரசியல்வாதிகள் பேசாதவற்றையா இயக்குநர் சீமான் பேசிவிட்டார்?

### பாரதிராஜா கேள்வி

அரசியல்வாதிகள் பேசாதவற்றையா எங்கள் சீமான் பேசிவிட்டார். எதிலும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் - என்று இயக்குநர் பாரதிராஜா நேற்றுமுன்தினம் கேள்வி எழுப்பினார்.

புதுச்சேரி காலாப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள இயக்குநர் சீமானைப் பார்ப்பதற்கு தமிழ்த்திரைப்பட இயக்குநர்கள் பாரதிராஜா, மணிவண்ணன், ஓவியர் புகழேந்தி ஆகியோர் வந்தனர். சிறைக்குள் சென்று சீமானைப் பார்த்து விட்டு வெளியில் வந்தபோது அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் அணியை விளையாட அனுப்பாத இந்திய அரசு தமிழர்களைக் கொன்று குவித்து வரும் இலங்கைக்கு ஆயுதங்களை அனுப்பி வைக்கின்றது.

அதிகாரப் பங்கீடு தேவை என்று இலங்கை அரசிடம் தமிழன் போராடுகிறான். இதற்காக தமிழினம் கொன்று குவிக்கப்படுகிறது - என்றார்.

# இராமாயண கால நிகழ்வுகள் இப்போதும் இலங்கையில்...!

## ஈழப் போரை ஒப்பிட்டு வைகோ விளக்கம்



சென்னை, பெப்.25

இராமாயண கால நிகழ்வுகள் இலங்கையில் இப்போதும் தொடர்கின்றன - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்தார்.

பழ. கருப்பையா எழுதிய ''எல்லைகள் நீத்த இராம காதை' நூல் வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் பேசியபோதே இவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

உலகப் புகழ் பெற்ற காவியங்கள் வரிசையில் முதன்மையானதாகப் போற்றப்படுவது கவிச்சக்கரவர்த்தி கம்பன் எழுதிய இராமாயணம். உலகின் தலைசிறந்த படைப்பாகப் போற்றப்படும் ஹோமரின் இலியட் காவியத்துக்கு இணையாக இராமாயணம் கருதப்படுகிறது.

அத்தகைய இராமாயணத்தை நான் கடவுளின் காப்பியமாகக் கருதவில்லை. ஆனால் மிகச் சிறந்த தமிழ் இலக்கிய காவியமாகப் பார்க்கிறேன்.

அக் காவியத்தில் சீதையை இராவணன் கவர்ந்து சென்ற நேரத்தில், இராமனுக்கு உதவுவதற்காக சுக்ரீவன் வந்து சேர்வான். சுக்ரீவனை தன் நண்பனாக ஏற்றுக்கொள்ளும் இராமன், சுக்ரீவனுடன் போர் புரியும் அவன் சகோதரன் வாலியை அழிப்பான்.

உயிரைத் துறக்கும் முன் வாலி -

இராமா உனது தேசம் அயோத்தி. இதுவோ கிஷ்கிந்தை. இது என் ராஜ்ஜியம். இங்கு எங்களுக்குள் நடக்கும் பிரச்சினை யில் நீ எவ்வாறு தலையிடலாம்? அதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது? - என வினவுவான். அன்று இராமன் செய்ததைத்தான் இன்று இந்திய அரசும் செய்தது. 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை இலங்கைத் தமிழர்கள் மீது இந்திய அரசு திணித்தது.

இராமனுக்கு இணையாக இராவணனும் மிகச் சிறந்த வீரன். அந்த இராவணனின் மகன் இந்திரஜித்தும் மிகச் சிறந்த வீரன். கையில் எந்த ஆயுதமுமின்றி போர்க்களத்தில் நிற்கும் இந்திரஜித், எதிரிகள் வீசும் அம்புகளையே தனது ஆயுதமாக்கி, எதிரிகள் மீது திருப்பி வீசி போராடுவான்.

அத்தகைய வீரமிக்க போராளிகள் இலங்கைத் தமிழர்கள். இன்று விடுதலைப் புலிகள் மீது பன்னாட்டு இராணுவ உதவியுடன் இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனால் இந்திரஜித் வழியிலேயே இன்று எதிரிகளின் ஆயுதங்களைப் பறித்து தங்கள் போரை முன்னெடுத்துச் செல்கிறார்கள் விடுதலைப் புலிகள்.

இராமாயண நிகழ்வுகள் கற்பனையானவை. ஆனால் அதே நிகழ்வுகள் இன்று இலங்கையில் நிஜமாகத் தொடர்கின்றன.

பெருமைமிக்க கம்பனின் இராமகாவியம் குறித்த தனது பார்வையை, எல்லைகளைக் கடந்த அந்தக் காவியம் குறித்த நூலை பழ. கருப்பையா மிகச் சிறப்பாக எழுதியுள்ளார் - என்றார்.

# நீதிமன்றப் புறக்கணிப்பு தொடரும் தமிழகத்தில் 27இல் உண்ணாவிரதம்

## சட்டத்தரணிகள் அறிவிப்பு

சென்னை, பெப். 25

சட்டத்தரணிகள் மீதான தாக்குதலைக் கண்டித்து தமிழகம் முழுவதும் வரும் 27ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என்று சட்டத்தரணிகள் குழு அறிவித்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்ற மோதல் சம்பவம் தொடர்பாக சட்டத்தரணிகள் போராட்டக்குழுவின் ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை நடந்தது.

கூட்டத்தில் நிறைவேற் றப்பட்ட தீர்மானங்கள் குறித்து, போராட்டக்குழு தலைவர் பால் கனகராஜ் கூறியவை வருமாறு -

உயர் நீதிமன்ற வளாகத்தில் 19ஆம் திகதி நடந்த சம்பவத்துக்கு காரணமான பொலிஸ் டி.ஜி.பி., கமிஷனர், இணை கமிஷனர் ஆகியோரை சஸ்பெண்ட் செய்யும் வரை நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டம் தொடரும். வரும் 27ஆம் திகதி தமிழகம் முழுவதும் சட்டத்தரணிகள் உண்ணாவிரதம் இருப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதுவரை உயர்நீதி மன்றத்தில் சட்டத்தரணிகள் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவார்கள்.- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடான் ஜனாதிபதிக்கு பிடியாணை?

# சர்வதேச நீதிமன்று மார்ச் 4இல் முடிவு!



ஹேகு, பெப். 25

படுகொலைகள் தொடர்பாக சூடானிய ஜனாதிபதி ஒமர் அல்-பஷீரை கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிப்பது தொடர்பான முடிவு, எதிர்வரும் மார்ச் 4 ஆம் திகதி வெளியிடப்படும் என ஐ.நாவின் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சூடானின் டாபூர் மாகாணத்தில் மனிதாபிமனத்துக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், இனப்படுகொலைகள், குற்றச்செயல்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கு, ஒமர் அல்-பஷீர் முகங்கொடுக்க வேண்டுமா? என்பதை இந்நீதிமன்ற நீதிபதிகள் கூடி தீர்மானிக்கவிருக்கிறார்கள்.

2002 ஆம் ஆண்டு, ஹேகுவில், ஐ.நாவின் இந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நிறுவப்பட்டது. எனினும், இந்நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவிருக்கும் அதிசிரேஷ்ட பிரமுகர் ஒமர் அல்- பஷீரே ஆவார்.

வழக்குத் தொடுநரால், இந்நீதிமன்றத்தில் தமக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ஒமர் அல்-பஷீர் நிராகரித்துள்ளார். அத்துடன் இந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்ளவும் மறுத்து வருகிறார்.

பிரதம வழக்குத் தொடுநர் லூயிஸ் மொரினோ - ஒகம்போ, கடந்த ஜூலையில் ஒமர் அல்-பஷீரை கைது செய்வதற்கான சர்வதேச பிடியாணையைப் பிறப்பிக்குமாறு இந்நீதிமன்றத்தைக் கோரியிருந்தார். இது தொடர்பான முடிவே, எதிர்வரும் மார்ச் 4 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

ஒரு நாட்டின் தலைவராகப் பதவி வகிக்கும் காலத்திலேயே, இதுவரைக்கும் எவர் ஒருவர் மீதும் இந்த சர்வதேச நீதிமன்றத்தில் யுத்தக் குற்றச்சாட்டுகள் சாட்டப்படவில்லை. பதவியிலிருக்கும் போதே, இக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகும் முதல் ஜனாதிபதி ஒமர் அல்- பஷீரே ஆவார்.

சூடானின் டாபூர் பிராந்தியத்தில் மூவின மக்களைக் கொன்று குவிப்பதற்கான கொலைத் திட்டத்தின் சூத்திரதாரி இவரே ஆவார் என்ற குற்றச்சாட்டும் இவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது.

படுகொலைகள்- பூண்டோடு அழித்தல், நாடுகடத்தல், சித்திரவதைகள், வல்லுறவுகள் ஆகியவை தொடர்பான குற்றச்சாட்டுகளும் ஒமர் அல்-பஷீருக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் அடங்கும்.

இவருக்கு எதிரான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளாவன: டாபூர், மாஸாலிட், ஜஹாவா இன மக்களைக் கொன்று குவித்தமை, இவர்களுக்கு உடல் ரீதியாகவும் மனோரீதியாகவும் மீள முடியாதவாறு தீங்கிழைக்கப்பட்டமை.

மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளாவன:, படுகொலைகள், குடும்பங்களை பூண்டோடு ஒழித்தமை, கட்டாய வெளியேற்றம், பலாத்கார பாலியல் நடவடிக்கைகள்.

போர்க்காலக் குற்றச்சாட்டுகளாவன: சித்திரவதைகள், டாபூர் சிவிலியன்கள் மீதான குரூர தாக்குதல்கள், நகரங்கள், கிராமங்கள் கொள்ளையிடப்பட்டமை, தீயிட்டு கொளுத்தப்பட்டமை.

டாபூர் பிராந்தியத்தில் அரசுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே மூண்டு வந்த ஆறு வருடகால மோதல்களில் 3 இலட்சம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். இருபது இலட்சத்துக்கு மேற்பட்டோர் தம் வீடுகளைவிட்டு ஓடியுள்ளார்கள் என ஐ.நா. கணிப்பீடு செய்துள்ளது.

# கொங்கோவுக்கு மேலதிக படைகள், ஹெலிகள்

கிங்ஸஸா, பெப். 25

கொங்கோவுக்கு ஐ.நா. மேலதிக படையை அனுப்ப முன்வந்துள்ளது. எல்.ஆர்.ஏ. கிளர்ச்சிக்காரர்களால் தாக்கப்படும் டுங்கு என்னும் நகருக்கு மேலதிக இராணுவத்தினருடன் பல ஹெலிஹப்டர்களும் அனுப்பப்படும் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

அடுத்த சில வாரங்களில் மேலும் 1500 எகிப்திய சிப்பாய்கள் கொங்கோவில் இருப்பார்கள் என்று அங்கு செயற்படும் ஐ.நாவின் சார்பிலான பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை காக்கத் தவறிவிட்டார்கள் என்று கொங்கோவில் செயற்படும் ஐ.நாவின் பிரிவு கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

கடந்த நத்தார் பண்டிகை முதல் இதுவரை எல்.ஆர்.ஏயினால் 1,000 பேர் வரை அங்கு கொல்லப்பட்டுள்ளார்கள்.

# இந்தியாவின் அமைதிக்குழு பாகிஸ்தானுக்கு விஜயம்

இஸ்லாமாபாத், பெப். 25

இந்திய- பாகிஸ்தான் இடையே நல்லுறவை மேம்படுத்தும் அமைதிக்குழு ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தான் வந்தடைந்தது.

ஹாலிவுட் திரைப்படத் தயாரிப்பாளர் மகேஷ்பட் தலைமையில் சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என 13 பேர் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை வாகா எல்லையை வந்தடைந்த இந்த குழுவினரை பாகிஸ்தான் மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் அஸ்மா ஜஹாங்கீர் சாஃப்மா, செயலாளர் நாயகம் இம்டியாஸ் ஆலம், நடிகை மீரா ஆகியோர் வரவேற்றனர்.

அமைதிக் குழுவின் தலைவர் மகேஷ்பட்டிடம் தங்களது தலைமையிலான குழுவின் நோக்கம் என்ன என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, ''மும்பைத் தாக்குதலை அடுத்து இருநாடுகளுக்கிடையே உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளிடையே போர் பதற்றமும் நீடிக்கிறது. இந்த பதற்றத்தைத் தணித்து இரு நாடுகளிடையேயான நல்லுறவை மேம்படுத்துவதே எங்களது நோக்கம்'' - என்றார்.

# பாகிஸ்தான் பஜூர் பிரதேசத்தில் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம்

இஸ்லாமாபாத், பெப். 25

பாகிஸ்தான் பஜூர் மாவட்ட சிரேஷ்ட தலிபான் பிரமுகர் பாகீர் மொஹம்மத், தாம் நிகழ்த்திய வானொலி உரையொன்றில் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்தார்.

இப்பிராந்தியத்தில், பைத்துல்லா மெஹ்சூட்டே, முக்கிய தலிபான் கொமாண்டராக இருக்கிறார். இவருக்கு அடுத்த நிலையிலிருப்பவர்தான் பாகீர் மொஹம்மத் என பாகிஸ்தானிய அதி காரிகள் தெரிவிக்கிறார்கள்.

''பஜூர் மாவட்டத்திலுள்ள பச்சினா மலைப் பிராந்தியத்தை பாகிஸ்தான் இராணுவம் கைப்பற்றி, தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. இச்சமயத்தில் வெளியாகியுள்ள ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தப் பிரகடனம் பரிசீலனைக்குரியது'' என பிராந்திய இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

# இலங்கை- பாகிஸ்தான் ஆட்டத்தில் யூனிஸ்கான் சதமடித்து அசத்தல்

கராச்சி, பெப். 24

இலங்கை அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 296 ஓட்டங்களை எடுத்துள்ளது. கப்டன் யூனிஸ்கான் 149 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காமல் உள்ளார்.

கராச்சி தேசிய ஸ்டேடியத்தில் நடக்கும் இப்போட்டியில் (21-25), நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, 7 விக்கெட் இழப்புக்கு 644 ஓட்டங்கள் என்ற நிலையில் முதல் இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

அணித் தலைவர் ஜெயவர்தன 240, சமரவீர 231 ஓட்டங்களை விளாசியதுடன், 4வது விக்கெட்டுக்காக 437 ஓட்டங்களைச் சேர்த்து உலக சாதனை படைத்தனர். அடுத்து களமிறங்கிய பாகிஸ்தான், 2ம் நாள் ஆட்ட முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 44 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மன்சூர் (18), யூனிஸ் கான் (0) இருவரும் நேற்று தொடர்ந்து விளையாடினர். மன்சூர் (27) மெண்டிஸ் சுழலில் வெளியேறினார். யூனிஸ் - சொகைப் மலிக் ஜோடி 3வது விக்கெட்டுக்காக நிதானமாக விளையாடி 149 ஓட்டங்களைச் சேர்த்தது. அணித் தலைவர் யூனிஸ் கான் சதம் அடித்து அசத்தினார். அவரைத் தொடர்ந்து அரை சதம் பூர்த்தி செய்த மலிக் 56 ஓட்டங்களில் துரதிர்ஷ்டவசமாக ஆட்டமிழந்தார்.

மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில், பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 296 ஓட்டங்களை எடுத்துள்ளது. யூனிஸ் 149 (282 பந்து, 17 பவுண்டரி), மிஸ்பா உல்ஹக் 20 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

# குத்துச்சண்டை வீரர்களுக்கு உதவி

புதுடெல்லி, பெப். 24

இந்திய குத்துச்சண்டை, மல்யுத்த வீரர்களுக்கு நிதியுதவி செய்ய ஸஹாரா இந்தியா நிறுவனம் முன்வந்துள்ளது.

சீன - பீஜிங் ஒலிம்பிக்கில் சிறப்பாக விளையாடிய விஜேந்தர், அகில் குமார், ஜிதேந்தர் குமார், தினேஷ் குமார், அந்ரேஷ் லாக்ரா உட்பட 13 குத்துச்சண்டை வீரர்கள் 17 மல்யுத்த வீரர்கள் இதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இத்தகவலை, இந்திய குத்துச்சண்டை சம்மேளன செயலர் முரளிதரன் ராஜா டெல்லியில் நேற்றுத் தெரிவித்தார்.

# உலகில் 1 ஆம் இலக்க அணி இந்தியா; பயிற்சியாளர் மோல்ஸ் பாராட்டு

கிறிஸ்ட்சர்ச், பெப். 25

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக வெற்றிகளைக் குவித்து வரும் இந்திய அணியே உலகின் முதலாதம் இலக்க (நம்பர் 1) அணி என்று நியூஸிலாந்து பயிற்சியாளர் அண்டி மோல்ஸ் கூறியுள்ளார்.

டோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, நியூஸிலாந்து அணியுடன் ருவன்ரி 20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் மோத உள்ளது. முதல் ருவன்ரி 20 போட்டி கிறிஸ்சர்ச்சில் நாளை நடக்கிறது. இந்திய அணி குறித்து நியூஸிலாந்து பயிற்சியாளர் மோல்ஸ் நேற்று கூறியதாவது:



தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலிய அணிகளை விட இந்தியாவே இப்போது தலைசிறந்த அணியாக விளங்குகிறது. கடந்த 18 மாதங்களில் வெளிநாடு மற்றும் உள்ளூர் தொடர்களில் அபாரமாக வெற்றிகளைக் குவித்து வரும் இந்திய அணியே நம்பர் 1 என்பதில் சந்தேகம் இல்லை. ருவன்ரி 20, ஒருநாள், டெஸ்ட் என எல்லா வகை கிரிக்கெட் போட்டிகளிலும் அவர்கள் தங்கள் திறமையை நிரூபித் துள்ளனர். கடந்த முறை நியூஸிலாந்து வந்தபோது டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் இந்தியா தோற்றிருந்தாலும், இம்முறை எந்த சவாலுக்கும் தயாராக வந்துள்ளது. அணியில் அனுபவ வீரர்களுடன் துடிப்பான இளம் வீரர்களும் இடம் பெற்றுள்ளனர். பயிற்சியாளர் கேரிகிறிஸ் டனும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்.

இவ்வாறு அண்டி மோல்ஸ் கூறினார்.

# தர வரிசையில் சனியா மிர்ஷா முன்னேற்றம்



புது தில்லி, பெப்.24

சர்வதேசத் தர வரிசையில் இந்தியாவின் சானியா மிர்ஷா 806 புள்ளிகளுடன் 75-வது இடத்தைப் பிடித்துள்ளார்.

அண்மைக்காலமாக சிறப்பாக விளையாடி வரும் சானியா மிர்ஷா, திங்கட்கிழமை வெளியிடப்பட்ட தரவரிசையில் 12 இடங்கள் முன்னேறியுள்ளார்.

இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மன் 546 புள்ளிகளுடன் 4 இடங்கள் முன்னேறி 150-வது இடத்தைப் பெற்றுள்ளார்.

இரட்டையர் பிரிவில், சானியா மிர்ஷா 1,532 புள்ளிகளுடன் 63-வது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

ஆடவர் பிரிவில், மகேஷ் பூபதி ஓரிடம் பின் தங்கி 6-வது இடத்தைப் பெற்றுள்ளார். அதே சமயம், லியாண்டர் பயஸ் தனது 7-வது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

இரட்டையர் பிரிவில், ரோஹன் போபண்ணா 75-வது இடத்தில் உள்ளார்.

அமெரிக்காவில் உள்ள மெம்பிஸில் நடைபெற்ற மோர்கன் கீகன் ரெனிஸ் போட்டியில் வென்ற சம்பியன் அமெரிக்க வீரர் அண்டிரொடிக். சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் 7-5, 7-5 என்ற நேர் செட்களில் செக் குடியரசின் ராடெக் ஸ்டெபானெக்கை வீழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரையிலிருந்து வானுக்கு விமானத்தை நாடிச் சென்று தாக்குகின்ற சிறிய ரக ஏவு கணை ஒன்று தொப்பிகலை பொலிஸ் பிரிவில் உள்ள நப்பன்வில்லு வாவிப் பகுதிக்கு அருகே புதர் ஒன்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என அறிவிக்கப் படுகிறது.

பிடிபட்ட புலி இயக்க உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவலையடுத்து இது நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஏவுகணை 10.3 கிலோகிராம் நிறையுள்ளது எனவும், 600 மீற்றர் முதல் 6000 மீற்றர் வரை சென்று தாக்கக் கூடியது எனவும் அதன் பெறுமதி 40 லட்சம் ரூபா முதல் 50 லட்சம் ரூபா வரை ஆகும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## புதுக்குடியிருப்புக்குள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து அக்கிராமத்தையும் படையினர் தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதுதொடர்பில் இராணுவ பேச்சாளர் மேலும் கூறியவை வருமாறு:-

புதுக்குடியிருப்பு நகரைச் சுற்றிவளைத் திருந்த இராணுவத்தின் 52ஆவது, 53ஆவது படையணியினரும் 4ஆவது விசேட படையணியினருமே நேற்று முற்பகல் நகருக்குள் பிரவேசித்துள்ளனர். தற்போது புதுக்குடியிருப்பு நகருக்குள் நிலைக்கொண்டுள்ள படையணியினர் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தை முழுமையாகக் கைப்பற்றும் முன்னகர்வு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, பரந்தன் முல்லைத்தீவுக்கிடையிலான ஏ - 35 வீதியினூடாக முன்நகர்வு முயற்சிகளை மேற்கொண்டு வந்த இராணுவத்தின் 58ஆவது படையணியினர் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தேவபுரம் கிராமத்தை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

குறித்த கிராமத்தைக் கைப்பற்றுவதற்கான மேற்கொள்ளப்பட்ட இராணுவ முன்னெடுப்புக்களில் 15 விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மோதலை அடுத்து நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது புலிகளால் பயன்படுத்தப்பட்ட சுமார் 80 அடி நீளமான நீர்மூழ்கிப் படகொன்று உட்பட வாகனங்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு முன்னரங்குகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அவ் வியக்கத்தினரால் அமைக்கப்பட்டிருந்த பாரிய மண்அணைகளை தகர்த்தே குறித்த கிராமத்தை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்-என்றார்.

இதேவேளை-

கடந்த மூன்று நாள்களாக புதுக்குடியிருப்பு நகரை அண்டி இராணுவத்தினர் நடத்தும் ஐந்து முனைகளிலான முன்னேற்ற நகர்வுகளை தடுக்கும் விதத்தில் விடுதலைப்புலிகள் உக்கிர சண்டையில் ஈடுபட்டு வருவதாகவும் அப்போது படையினருக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இணையத் தளங்கள் தெரிவித்துள்ளன. முறியடிப்புத் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்த வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## வன்னி மக்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறைமாவட்டங்களின் ஆயர்கள் மேற் கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். இத் தகவலை யாழ்.ஆயரின் செயலாளர் அருட் தந்தை ஆர்.றொசான் அடிகளார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு - திருகோணமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், மட்டக்களப்பு துணை ஆயர் பொன்னையா ஜோசப் ஆகியோர் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

ஆயர்கள் கூட்டாக தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னியில் குறுகிய வட்டத்துக்குள் சிக்குண்டு சாவின் அகோரப்பிடியில் மக் கள் சிக்கித்தவிக்கிறார்கள்.

அண்மைய தகவல்களின் பிரகாரம் 3 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதேவேளை மூன்று மடங்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தப் பயங்கர மனித அவலத்தை தடுத்து நிறுத்த எடுத்த சகல முயற்சிகளையும் அரசு அலட்சியப்படுத்திக் கொண்டு போரை கொடிய முறையில் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

எம் அருமை வன்னி வாழ் மக்கள் பூண்டோடு அழிந்து போக தாங்கள் அனு மதிக்கமாட்டீர்கள் என்ற நோக்கில் இந்த வேண்டுகோளை தங்கள் உடனடி நட வடிக்கைக்காக மிக உருக்கமாக நான்கு ஆயர்களாகிய நாங்கள் சமர்ப்பிக்கின்றோம் என்று உள்ளது. (அ-1)

## மோதலை இடை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான் கீ-மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

செய்தியாளர்களுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலில் சிக்கியுள்ள மக்கள் மத்தியில் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளமையை ஐக்கிய நாடுகள் சபை கடுமையாகக் கண்டிக்கின்றது.

மேலும் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வெளியேற விரும்பும் மக்கள் பாதுகாப்பாகச் செல்வதற்காக மோதல்கள் இடைநிறுத்தப்படுவதை ஐக்கிய நாடுகள் சபை வலுவாக ஆதரிக்கின்றது.

சகல தரப்புக ளையும் அரசியல் பேச்சுகளை நோக்கிய தீவிர முயற்சிகளை மேற் கொள் ளுமாறு மீண்டும் ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்துகின்றது. - என்றார். (அ-சி)

## போரில் சிக்கியுள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்குமாறு சர்வதேச சமூகம் விடுத்துள்ள வேண்டுகோள்கள் குறித்து ஆராயத் தயார் என்ற தனது விருப்பத்தை விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியுள்ளனர் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன'' - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இந்தப் பின்னணியில் - நாட்டுக்குள் இடம்பெயர்ந்த அகதிகளின் நகர்வுகளை சர்வதேச முகவர் அமைப்புகள் கண்காணிப் பது உட்பட்ட விடயங்கள் அடங்கியதாக - அந்த அகதிகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு மீட்பது தொடர்பான நம்பகமான, பொருத்தமான நடைமுறைத் திட்டம் ஒன்றை உருவாக்குமாறு இலங்கை அரசையும் ஏனைய தொடர்புபட்ட அனைவரையும் இந்தியா கேட்டுக் கொள்கின்றது.'' - என விஷ்ணு பிரகாஷ் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு வலயத்தின் புனிதத்தை இரு தரப்புகளும் பேணவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள பெரும் எணணிக்கையான மக்களைக் கடல் மற்றும் தரை வழியாகக் கொண்டு வருவதற்குரிய நடைமுறைகளை வகுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளை அவர் கேட்டுக்கொண்டார்.

அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்பாகக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அனைத்து ஒத்தாசைகளையும் மற்றும் மனிதாபிமான உதவிகளையும் இந்தியா வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகவீனமுற்றுள்ள - காயமடைந்துள்ள - மக்களுக்கான மருத்துவ உதவிப் பொருள்கள் அவர்களுக்கு விரைந்து கிட்டுவதற்கான வகையில் அனுப்பி வைப்பதற்கான நடைமுறைகள் குறித்து இலங்கை அரசுடன் இந்தியா கலந்துரையாடி வருகின்றது'' - என்றும் அவர் தெரிவித்தார். (அ-சி)

## யுத்த நிறுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக்கட்டும் இறுதிக்கட்டத்தில் நாம் இருக்கின்றோம். இந்த நிலையில் எவரும் யுத்த நிறுத்தம் பற்றிப் பேச முடியாது.

ஜனநாயகமும் பயங்கரவாதமும் ஒரே கட்டிலில் உறங்க முடியாது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டால்தான் ஜனநாயகம் வாழும்.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் இறுதிக்கட்டத்தில் இருக்கும் நாம் மிகவும் எச்சரிக்கையாகச் செயற்படவேண்டியுள்ளது.

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு எம்மிடம் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை. இதை விடுத்து யுத்த நிறுத்தத்திற்கு எம்மை அழைப்பது கேலிக் கூத்தாகும் - என்றார் பிரதமர். (அ-சி)

## 'சார்க்' கூட்டத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரணாப் முகர்ஜி கலந்துகொள்ள மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் உட்பட முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ள இந்த மாநாட்டில் பிரணாப் முகர்ஜிக்குப் பதிலாக இந்தியாவின் வெளிவிவகார அமைச்சுக்கான இரு இணை அமைச்சர்களில் ஒருவரான ஈ.அஹமட் கலந்துகொள்வார் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் தமக்கு உள்ள வேலைப் பளு காரணமாகவே வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியால் இம் மாநாட்டுக்கும் கொழும்பு வர முடியவில்லை என்றும் புதுடில்லியில் கூறப்பட்டது.

## யாழ்ப்பாணத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டார்.

மாத்தறையில் நேற்று இடம்பெற்றஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் வடபகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைகள் இலகுவாக்கப்படும். இந்த ரயில் சேவையை இயக்க 4 கோடி 50லட்சம் ரூபா தேவை. இதனை நாட்டு மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ள விருக்கிறோம்.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை அமைப்பதற்கு அம்பாந்தோட்ட மக்களும் கிளிநொச்சி ரயில்நிலையத்தை அமைப்பதற்கு மாத்தறை மாவட்ட மக்களும் உதவ உள்ளார்கள்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி திட்டங்களை ஒன்றிணைக்க தேசிய செயலகம் விரைவில் அமைக்கப்படும்.

இதற்கான பணிகள் ஏ-9 வீதி திறக்கப்பட்டதும் ஆரம்பிக்கப்படும்- இப்படி அமைச்சர் கூறினார். (அ-1-6)

## அருத்த மாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாதையைப் புனரமைத்துக்கொண்டு வருகின்றனர். மறுபுறத்தில் கண்ணிவெடிகளும் அகற்றப்படுகின்றன.

திருத்தப் பணிகள் அனைத்தும் முடிவுற்றதும் மார்ச் மாத இறுதியில் நாம் இப் பாதையைத் திறப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம் - என்றார். (அ-சி)

## உணவு வாகனத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனவரி 16ஆம் திகதி முதல் காணப்படும் மோசமான பாதுகாப்புச் சூழல் காரணமாக உணவு விநியோகத் தொடரணிகள் செல்லவில்லையென உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி அட்வான் கான் தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணிவெடிகள் மற்றும் சிறிய துப்பாக்கித் தாக்குதல்கள் காரணமாகவே வாகனத் தொடரணி செல்லவில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார். மோதல் இடம்பெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களுக்கு உணவுதவி அவசரமாகத் தேவைப்படுகின்றது எனச் சுட்டிக் காட்டியுள்ள அவர் மோதல்கள் சற்று தணிந்தாலேயே வாகனத் தொடரணிகள் மீண்டும் செல்லலாம், தற்போது அது சாத்தியமில்லையெனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## புதுக்குடியிருப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ப.தேசிகன் (வயது 07), த.ஸ்ரீ (வயது 43), க.லவன் (வயது 13),ஜெ.பார்த்தீபன் (வயது 20) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என இனங்காணப்பட்டனர்.

இதேவேளை-

புதுக்குடியிருப்பு பகுதியில் படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் 12 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 32 பேர் காயமடைந்துள்ளனர்.

த.யசித்தா (வயது 08), செ. புவனேந்திரன் (வயது 27), தி. எறப்பதாஸ் (வயது 45), த. தேசியன், சி.விஜலட்சுமி (வயது 42), ந.சிறிதரன் (வயது 40), சி.நிருசன் (வயது 15), நா.தவமணிதேவி (வயது 49), த.குயிலன் (வயது 02), இ.துளசிகன் (வயது 05), கி. அருளானந்தம் (வயது 33), ச.திலக் (வயது 30), ந.சுதாகரன் (வயது 31), சி.சர்வலட்சுமி (வயது 31), பூ.தேவி (வயது 35), ர.கலைச்செல்வி (வயது 19), ர.உசானந்தன் (வயது24), ச.யோகேஸ்வரி (வயது 54),

கு.சர்வானநந்தினி (வயது 21), ஜெ.சூரியமாலா (வயது 25), ப.பவித்திரா (வயது 04), கு.சுரேந்திரன் (வயது 27), பெ.அமலாம்பிகை (வயது 21), ப.றெசானி (வயது13), செ. பரமேஸ்வரன் (வயது 34), செ.தர்மசீலன் (வயது 30), ந.உதயராஜ் (வயது 29), இ.அருந்தவம் (வயது 23), த.பன்னீர்செல்வம் (வயது 36), நா.அருள்ராஜ் (வயது 47), செ.யம்பக் (வயது 16), நா.பகீரதன் (வயது 18) ஆகியோர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் இடம்பெயர்ந்த மக்கள் வாழ்விடங்கள் மீது நேற்று பிற்பகல் 4.50 மணிக்கு விமானப் படையின் 'மிக்-27' ரக விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 வயதுச் சிறுவன் உட்பட 5 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ரவீந்திரன் வினித் (வயது 04), ரவீந்திரன் வினோஜன் (வயது 14), ரவீந்திரன் மதீனா (வயது 33), டேவிட் ரவீந்திரன் (வயது 38), தவராசா அஜந்தன் (வயது 22) ஆகியோரே உடல் சிதறிப் பலியாகினர். (அ-1)

Become a Professional MCS
in Web Development
Supported By UNDP/JRRP
XHTML CSS, JavaScript ,PHP,MySQL,XML (RSS,Maps)
Dreamweaver,Photoshop,Flash,Server(Apache and IIS)
Domain Registration,Hosting,Control panel,SearchEngine optimize,Google™ (WebMaster tools, AdSense, Adwords)
E-mail marketing, Affiliate marketing, Merchant tools.
Extra: Introduction ASP, JSP
பதிவுகளை 26.02.2009 க்கு முன்பு மேற்கொள்ளவும்.
இணையத்தள வடிவமைப்பில் சர்வதேச அங்கத்துவம்(CIW)
New Batch :26.02.2009 10.00 AM
CIW விபரங்களுக்கு- 324 Palaly Road, Near Parameswara junction, Bus Root-764

## மரண அறிவித்தல்

### திருமதி இராமநாதன் இராஜேஸ்வரி

சரசாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பு, வெள்ளவத்தையில் வசித்தவருமான திருமதி இராமநாதன் இராஜேஸ்வரி நேற்று(24.02.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் அருணாசலம் இராமநாதனின் அன்பு மனைவியும் மஞ்சுளாவின் அருமைத் தாயும் இ.பிரபாகரனின் (லண்டன்) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(26.02.2009) வியாழக்கிழமை காலை 9 மணிக்கு 591, காலி வீதி, கல்கிசையில் அமைந்துள்ள மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்படும். பிற்பகல் 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

6/1, 'மாருதி கோட்ஸ்'
37/1, ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
தொ.பே.: 0602158975

தகவல்:
திருமதி மஞ்சுளா பிரபாகரன்
(மகள்).

CHEMISTRY (Group Class)
A/L 2011 பிரிவு - II
SAT, SUN 2.30 - 4.00
DIAS Bsc (Hons) Spl.
★ வரையறுக்கப்பட்ட மாணவர்கள் மட்டும்அனுமதி
★ அனுமதிக்குப் பெற்றோர்களின் வருகை அவசியம்
The College of Chemistry

Take an easy step towards your Management Degree
IDM JAFFNA
MBA
BBA
HND in Business Management
HNC in Business Management
DIBM
Batch Commencements
Batch 01: 27th feb 2009
Batch 02: 28th feb 2009
For Whom:-
A/L Commerce Students & senior and middle level executives in public and private sector organizations dealing with Business
Degree Awarding
➢London Metropolitan University –UK
➢York St John University – UK
➢PRIFYSGOL CYMRU University of Wales - UK
➢University of Worcester - UK
➢Wolverhampton University -UK
216, Navalar Road, Jaffna.
Tel.No : 021 2229901

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org